Registered as a news paper.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு+IV=16 விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்
மூலம் உலகின் எப்பாகத்தில்
இருந்தும் பணத்தை விரைவாக
பெற்றுக் கொள்ள நல்லூரில்...
சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 31 (20.07.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :291

# மக்களையும், தேசத்தையும் காப்பாற்ற உரியதருணத்தில் புலிகள் முடிவெடுப்பர்!

## அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சமாதான வழிமுறைகள் மூலம் தீர்வுகாண கொடுத்திருக்கும் வாய்ப்பை அரசாங்கம் தவறவிட்டுவிட்டு, யுத்தத்துக்குள் தள்ளுவது வேதனை தருகிறது.**

**இருப்பினும் – எங்கள் மக்களையும் தேசத்தையும் காக்கவேண்டிய பொறுப்புடன் இருக்கும் புலிகளை – தேசியத் தலைவர் வே.பிரபாகரன், சரியான நேரத்தில், சரியான சூழ்நிலையில் வழிகாட்டும் முடிவுகளை எடுப்பார் என்றும் – அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**உலகவங்கி வதிவிட பிரதிநிதியை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் மேலும் குறிப்பிடுகையில் –**

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு, பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைகள், பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது பற்றிய எங்களது நிலைப்பாடுகளை உலக வங்கி பிரதிநிதியிடம் தெளிவாக முன்வைத்திருக்கிறோம்.

இரண்டரை வருடங்களாக எந்த வித அபிவிருத்திப் பணிகளோ, மனிதாபிமானப் பணிகளோ முன்னெடுக்கப்படவில்லை. எங்கள் மக்கள் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மக்களின் தேவைகளை -அவசர மனிதாபிமானப் பணிகளை உள்ளூர்க் கட்டமைப்புக்கள் ஊடாக, முன்னெடுப்பதற்கு சாத்தியப்பாடான சூழ்நிலையினை உருவாக்க சர்வதேச சமூகம் சிந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கிறோம்.

சமாதான வழியில் பேசி இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வை எட்டுவதுதான் எங்கள் தலைமைப் பீடத்தின் நிலைப்பாடாகும்.

ஆனால், இதனை உதாசீனப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



உலக வங்கிப் பிரதிநிதியை வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்

## இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுக்கு
# இடைக்கால நிர்வாகம் அடிப்படையான அம்சமே!
## இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம்

(புதுடெல்கி)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திற்கு இறுதித்தீர்வு காண்பதற்கான படிமுறைகளில் - வடக்கு - கிழக்குப் பகுதிக்கான இடைக்கால நிர்வாகம் ஒரு அம்சமாக இருக்க வேண்டும் என இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

புதுடெல்கியில் நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இச்சந்திப்பின்போது -

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்கள் தொடர்பாக மனிதாபிமான முறையில் நடந்து கொள்வதற்குத் தேவையான சட்ட மூலத்தைத் தயாரிக்கும்படி அதிகாரிகளிடம் பணித்திருப்பதாகவும் அப்துல் கலாம் மேலும் குறிப்பிட்டார்.

## சமாதானப் பேச்சுக்களை -ஆரம்பிக்க
# புலிகளின் பதிலை எதிர்பார்த்து அரசாங்கம் காத்திருக்கிறதாம்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து அரசாங்கம் பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் -

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகைதந்த ஜேர்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

மன் வெளிவிவகார அமைச்சர் ஜெஷ்கா பிஷ்ஷரை ஜனாதிபதி மாளிகையில் வைத்துச் சந்தித்த போதே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த விடயங்களை அவரிடம் கூறியதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது - இலங்கையில் வாழும் சகல சமூகத்தவர்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, பேச்சுவார்த்தை ஊடான சமாதானத் தீர்வை எட்டுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார்.

ஜனாதிபதியின் கருத்துக்களுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

(புதுடெல்கி)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திற்கு இறுதித்தீர்வு காண்பதற்கான படிமுறைகளில் - வடக்கு - கிழக்குப் பகுதிக்கான இடைக்கால நிர்வாகம் ஒரு அம்சமாக இருக்க வேண்டும் என இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

புதுடெல்கியில் நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இச்சந்திப்பின்போது -

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்கள் தொடர்பாக மனிதாபிமான முறையில் நடந்து கொள்வதற்குத் தேவையான சட்ட மூலத்தைத் தயாரிக்கும்படி அதிகாரிகளிடம் பணித்திருப்பதாகவும் அப்துல் கலாம் மேலும் குறிப்பிட்டார்.

வும் ஆரம்பிப்பது தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து அரசாங்கம் பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் -

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகைதந்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜெஷ்கா பிஷ்ஷரை ஜனாதிபதி மாளிகையில் வைத்துச் சந்தித்த போதே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த விடயங்களை அவரிடம் கூறியதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது - இலங்கையில் வாழும் சகல சமூகத்தவர்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, பேச்சுவார்த்தை ஊடான சமாதானத் தீர்வை எட்டுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார்.

ஜனாதிபதியின் கருத்துக்களுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமருடன் நேற்று மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பு!



இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துத் தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து விளக்கியதுடன் பல்வேறு உதவிகள் குறித்து உயர் மட்டபேச்சுக்களை நடத்தினர்

புதுடெல்கியில் அமைந்துள்ள பிரதமரின் வாசஸ்தலத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சுமார் ஒருமணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, கிராமியப் பொருளாதார அபிவிருத்தி, விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளை அபிவிருத்தி செய்வது குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இந்தச் சந்திப்பின் போது - இலங்கைக்கு கப்பல் ஒன்றினை வழங்குவதற்கு இந்தியப்பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் கொள்கையளவில் நடைபெற்றபேச்சின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் குறித்து, அதனை முன்னெடுப்ப தற்காக முக்கிய அமைச்சர்கள் குழுவை அனுப்பிவைப்பதென்றும் இந்தச் சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் குறித்த விவாதம் ஓகஸ்ட் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக - இன்று நாடாளுமன்றில் நடத்தப்படவிருந்த விவாதம் ஓகஸ்ட் 12 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்த விவாதத்தைப் பிற்போடுமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளிநாடு சென்றிருப்பதால் இந்த விவாதத்தைப

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழு – புலிகள் திருகோணமலையில் சந்திப்பு!

திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், மாவட்ட கண்காணிப்புக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

நேற்றுமாலை 3 மணிக்கு திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன், மாவட்ட கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வலய மட்டப் போட்டிக்குத் தோற்றவுள்ளனர்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

### இசை - தனி

முதலாம் இடம் - பா.யாழினி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - ப.பவித்திரா (தேவரையாழி இந்துக்கல்லூரி).

மூன்றாம் இடம் - இ.விதுர்ஷன் (விக்னேஸ்வரா கல்லூரி).

### நடனம்

(முதலாம் இடம் - கி.சசிகலா (ஞானாசாரியார் கல்லூரி).

இரண்டாம் இடம் - ச.துவாரகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - அ.சபதிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

### பிரிவு - III கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்

முதலாம் இடம் - சூ.சூரியதாட்சாயினி (விக்னேஸ்வரா கல்லூரி).

இரண்டாம் இடம் - ஓ.கனகாம்பிகை (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - பா.குரபரன்ஷ (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

### பேச்சு

முதலாம் இடம் - வி.நிருஷா (விக்னேஸ்வரா கல்லூரி).

இரண்டாம் இடம் - ந.ரவிச்சந்திரிக்கா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - செ.கிர்த்தன (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

(நாளை தொடரும்)

---

இரட்டைக் குழந்தைகளில் மற்றைய

# குழந்தையை ஒப்படைக்குமாறு கோருகின்றனர் பெற்றோர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலம் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்று மட்டுமே தம்மிடம் வழங்கப்பட்டிருப்பதாகவும், மற்றைய குழந்தையைப் பெற்றுத்தருமாறு கோரி பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கரணவாயைச் சேர்ந்த தெய்வரதி திருஞானசேகரன் என்ற பெண் கர்ப்பம் ஏற்பட்ட பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஸ்கானிங் செய்து பார்த்தவேளை இரு குழந்தைகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதற்கான சத்திரசிகிச்சை நடைபெற்றபின்னர், பெண்குழந்தை ஒன்று மட்டுமே இருந்ததாகவும் ஸ்கானிங் செய்ததில் தவறு ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறியுள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்ட கிளினிக் அட்டையில் சிசு ஒன்று 88 மி.மீற்றர் என்றும் மற்றையது 89 மி.மீற்றர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் போது வழங்கப்படும் நோயாளர் வருகை பத்திரத்திலும் இரட்டைக்குழந்தை தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனவே, சத்திரசிகிச்சை மூலம் எடுக்கப்பட்ட மற்றைய குழந்தையை தமக்குப் பெற்றுத்தருமாறு கோரி அந்தப்பெண் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சுகாதாரசபை, மாவட்ட பிரஜைகள்குழு, விடுதலைப் புலிகள், மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக்குழு,. பிரதிச்சுகாதார ஆணையாளர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.

---

வீதிவிளக்குப் பொருத்த

# மின்சாரசபைக்கு ஒதுக்கிய நிதியை நிகொட் நிறுவனம் அனுப்பிவைத்தது!

யாழ்.மாவட்டத்தில் வீதி விளக்குகளை அமைப்பதற்காக நிகொட் நிறுவனம் ஒதுக்கிய நிதி, இலங்கை மின்சாரசபையின் யாழ். கிளையிடம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட நிகொட் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீதி விளக்குப் பொருத்தும் பணிகளுக்குக் கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அப்பணிகள் இதுவரை இடம்பெறாமல் இருப்பது குறித்து இலங்கை மின்சாரசபையினர் தமக்கு ஒதுக்கிய நிதி இன்னமும் தமது கையில் கிடைக்கவில்லை என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்திருந்ததை நமது ஈழநாடு கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து நிகொட் நிறுவனம் இந்த வேலைத் திட்டத்திற்கென ஒதுக்கிய 68 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாவை இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைத்துள்ளது. மின்சாரசபையினர் இதற்கான பணிகளை விரைவாக முனனெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

---

# அஸ்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று 14 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆறு போட்டிகள் நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் பெரியபுலம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணியும்,

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணியும்,

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணியும்,

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

இந்தப்போட்டிகளைத் தவிர கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய மகாவித்தியால அணியும் மோதவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (58)

---

### போக்குவரத்து பொலிஸ் அலுவலகம் திறப்பு

யாழ்.போக்குவரத்துப் பொலிஸாருக்கான காரியாலயம் ஒன்று நேற்றுத திறந்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலையத்துடன் இணைந்ததாகவே இந்தக் காரியாலயமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.எவ்.வானகுரு இப்புதிய கட்டத்தை திறந்துவைத்தார்.

இந்தநிகழ்வில், யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸார், யாழ். பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த சேனாரட்ண, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கருணாரட்ன போன்றோர் கலந்து கொண்டனர். (ப)

### ஆடிப்பூர உற்சவம்

மாவிட்டபுரம் விணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை பகல் 11 மணிக்கு ஆடிப்பூர உற்சவம் நடைபெறும.

பக்தர்கள் காலை 9 மணி முதல் தங்கள் சொந்த வாகனத்தில் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக ஆலய தர்மகர்த்தாசபை தெரிவித்துள்ளது.

---

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

# சுன்னாகம் பிரதேச சபையின் பொது நூலகத்தில் கண்காட்சி!

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு, வலி.தெற்கு சுன்னாகம் பிரதேசசபை சுற்றுச் சூழல் தொடர்பான கண்காட்சியொன்று சபையின் பொது நூலகத்தில் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள், சுற்றுச்சூழல் தொடர்பான கண்காட்சியில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என நூலகர் தெரிவிததார். (100)

---

# அஸ்ரா கிண்ணத்துக்கான இறுதித் தெரிவில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதுகிறது!

அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் 16 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து ஒரு பாடசாலை அணியினை தெரிவு செய்வதற்கான யாழ். மாவட்ட இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 12 பாடசாலை அணிகளில் அஸ்ரா சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டு 2 ஆம் சுற்றுக்கு ஆறு அணிகள் தகுதி பெற்றன, 2ஆம் சுற்றிலிருந்து யாழ். மத்திய கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன.

மேற்படி போட்டி இன்று காலை 9 மணி முதல் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக. அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான யாழ்.மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

இந்த இறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணி மாவட்ட ரீதியாக கொழும்பில் நடைபெறும் இறுதிக் கட்டப்போட்டிக்குத் தகுதிபெறும். (58)

---

### ஆடிப்பூரத் திருவிழா

நாகேஸ்வரன், அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு ஆடிப்பூரத்திருவிழா நடைபெறவுள்ளது.

விசேட பூசைகளைத் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வருவார்.(206)

### புனித மரியாள் வித்தியாலய தமிழ் விழா

யாழ்.புனித மரியாள் வித்தியாலய தமிழ்விழா நாளை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில், பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் த.இராசலிங்கம் கலந்துகொள்வார். (58)

### 1000 தேசிய அடையாள அட்டைகள் யாழ்.வந்தன

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குரிய 1000 அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத்திணைக்களத்திற்கு கிடைத்திருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிராமசேவையாளர்கள், பாடசாலைகளின் ஊடாக விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகளே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)


## மனதார வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியின் வட பிராந்திய உதவி முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்று சேவையாற்றிவரும்

திருவாளர் துரைசிங்கம் ரகு

அவர்களைப் பாராட்டி மனநிறைவடைவதுடன் அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

மகாராசி சில்க்ஸ்
உரிமையாளர்: சுரத் தருமரட்னம்

(சி/2770)

## வரலாறு காணாத மலிவு விற்பனை

COMMERCE STUDENTS' UNION - UNIVERSITY OF JAFFNA

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை
நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2764)

ராஜா யாழ்ப்பாணம்.

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த



காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)

மானஸ்தன்

(சி-2725)

நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், சுகன்யா நடித்த

கேப்டன்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்



சில தினங்களுக்கு மட்டும்

அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

வானவில்

21 முதல் குத்து

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## சிறுவிளம்பரம்

ஐரோப்பிய நாடுகளுக்கான VISA

**CANADA, UK, SWITZERLAND, GERMANY** போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு **VISA** விற்கு விண்ணப்பம் செய்யும்போது, முறையான வழி நடத்தலைத் தெரிவுசெய்ய வேண்டும். உங்களுடைய ஆவணங்களைத் தகுந்த முறையில் சரி பார்த்து, தகுந்த ஆலோசனைகளையும் தருகின்றோம். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கும், ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கவும். **VISA** நிராகரிக்கப்பட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம். **T.P No : 2504665**. திருமதி **R.** செல்வராஜா, (789)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# கொள்ளுப்பிட்டி தற்கொலை தாக்குதல் விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிப்பு

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விசாரணை அறிக்கைகள் - அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின் தகவல்களைத் தாம் ஊடகங்களுக்கு வழங்குவதில்லை என முடிவெடுத்துள்ளதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பான விபரங்களை - அரசாங்கமோ அல்லது விடுதலைப் புலிகளோ விரும்பும் பட்சத்தில் ஊடகங்களுக்கு வெளியிடலாம் எனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்தது.

இதேவேளை, தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அந்த அறிக்கை தொடர்பான தகவல்களைத் தாம் பொதுமக்களிடம் வெளியிடுவது தொடர்பாக இன்னமும் முடிவுகள் எட்டப்படவில்லை என அரசாங்கத் தரப்பு தெரிவித்தது

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே இந்த வன்முறைகளைப் பொறுப்பேற்க வேண்டுமென - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும், இத்தகைய வன்முறைகள் தொடரும் பட்சத்தில் அது போர் நிறுத்த ஒப்பந்தத்தையே செயலிழக்கச் செய்யும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# புராதனப் பொருட்களை திருட முயன்றவர் கைது

பொத்துவில் உகந்தை பம்பரகஸ் தலாவ எனும் காட்டுப் பகுதியில் - புத்தர் சிலையை உடைத்து அதன் கீழுள்ள புராதனப் பொருட்களான முத்து, இரத்தினம், யானைத்தந்தம் போன்றவற்றைத் தோண்டி எடுக்க முயன்ற 10 பேரை, பொத்துவில் பொலிஸார் கடந்த வெள்ளியன்று காலை 4.00 மணியளவில் முற்றுகையிட்டபோது ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் 9 பேர் தப்பி ஓடிவிட்டதாகப் பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கருணாரட்ணா தெரிவித்தார்.

இதன்போது துப்பாக்கி ஒன்றும், மூன்று துவிச்சக்கர வண்டிகளும், வாளிகள், கூடைகள், தண்ணீர் கலன், பூசைக்குரிய பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கமையவே இந்த முற்றுகை இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான நடவடிக்கைகள் திருப்தி அளிக்கின்றதாம்!

## ஜேர்மன் வெளியுறவு அமைச்சர்



சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இதுவரை இலங்கை கண்டுள்ள முன்னேற்றம் திருப்தி தருகின்றது என, ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் யொஸ்கா பிஸ்ஸர் தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகள் மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் 25 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்!

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் சிக்கலுக்கு உட்பட்டிருப்பதால், உடனடியாகத் தலையிடுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்த கோரிக்கை, சமாதானப் பேச்சுவார்த்தையைத் துரிதமாக ஆரம்பிக்க பிரதிநிதியை விரைவில் அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு,

இது குறித்து இருதரப்பினருடனும் கலந்துரையாடுவதற்காக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கைக்கு வரும் ஹெல்கிசன் - ஜனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்களையும் சந்திக்கவுள ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையைத் துரித கதியில் ஆரம்பிப்பதற்கு நோர்வே பிரதிநியை அனுப்புமாறு ஜனாதிபதி சந்திரிகா நோர்வே அரசிடம் கோரியிருந்தார்.

இதுபோன்றே போர் நிறுத்த ஒப்பந்தம் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளதாகவும், இதனால் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது கடினமாக இருப்பதாகவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நோர்வே அரசுக்கு அறிவித்திருந்தது.

இவற்றைக் கவனத்தில் கொண்டே ஹெல்கிசன் இலங்கைக்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# பயங்கரவாதத் தடைச் சட்டம்; நேற்றுடன் 25 ஆண்டுகள் நிறைவு!

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நேற்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைந்தன.

நாட்டில் படுமோசமான மனித உரிமை மீறல்களுக்கும், நீதி நிர்வாகத்துறையின் சுதந்திரம் மற்றும் மனித உரிமை நியமனங்கள் அருகிச் செல்வதற்கும் இந்தச் சட்டமே வழி கோலியது.

1979 யூலை 19 இல் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் தற்காலிக ஏற்பாடு எனக் கூறி கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம், பின்னர் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் உரிமையுடன்கூடிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடையவே இந்தத் தடைச்சட்டம் மீண்டும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் 1982 இல் நிரந்தரமாக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தினால் எதிர்காலத்தில் ஜனநாயக விரோதத் தன்மை காரணமாக நாட்டில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி பல அரசியல் கட்சிகளும் வலுவான தொழிற் சங்கங்களும் உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்களும், சட்ட நிபுணர்களும், பொது அமைப்புக்களும் எச்சரித்திருந்தும் - ஜே.ஆர்.ஜெயவர்தனா பிடிவாதமாக நின்று நடைமுறையில் வைத்திருந்த இச்சட்டம் கடந்த 25 ஆண்டுகளிலும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலிகொண்டதுடன், ஆயிரக்கணக்கானோர் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமைக்கும் காரணமாக அமைநதது.

# வாக்களிப்பு முறையை மாற்ற அரசு விரைவில் பிரேரணை

## நாடாளுமன்றில் கொண்டுவர திட்டம்

நடைமுறையில் உள்ள வாக்களிப்பு முறையை மாற்றியமைக்கும் அரசியல் யாப்பைத் திருத்தும் பிரேரணையை விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை - புதிய தேர்தல் முறையின்படி நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கு நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையினரின் ஒப்புதல் கிடைத்துள்ளதாகவும் அரசியல் அமைப்பு மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் பின்னணியில், மிக விரைவிலேயே பொதுத்தேர்தல் இடம்பெறலாம் என்ற கருத்தின் அடிப்படையில், அரசு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் குணசேகர குறிப்பிட்டார்.

அரசியலமைப்பை முழுமையாகத் திருத்தியமைப்பது அரசின் எதிர்பார்ப்பென்றும், அதற்கு முன்னர் நடைமுறையில் உள்ள தேர்தல் முறையைத் திருத்தியமைக்கும் பிரேரணை கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் குணசேகர மேலும் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு கவசத்துடன் செல்வது நல்லது!

## அரசியல் அவதானிகள் தெரிவிப்பு

இன்று நாடாளுமன்றம் கூடும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெச்சரிக்கையாகப் பாதுகாப்புக் கவசங்களுடன் நாடாளுமன்றத்திற்குச் செல்வது நல்லது எனவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இன்று நாடாளுமன்றம் கூடும் போது - இன்றும் தொடர்ந்து இரு நாட்களும் இடைக்கால நிர்வாக சபை யோசனை குறித்து விவாதிக்க ஹெல உறுமய விண்ணப்பித்திருந்தது. அதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் தமிழீழத்திற்கான யோசனை என ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் இன்று அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் போது நாடாளுமன்றத்தில் பெரும் கூச்சல்களும், குழப்பங்களும், கைகலப்புக்களும்கூட ஏற்படும் என அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

கந்தப்பொல விவகாரம் குறித்து விவாதத்தில் உரையாற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான - எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரன் ஆகியோர் காத்திருக்கின்றனர்.

சென்ற தடவை கந்தப்பொல விவகாரம் குறித்து உரையாற்றிய போது அரசாங்கக் கட்சி ஆதரவாளர்கள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்திருந்தனா.

இதேவேளை, இன்று கூடும் நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையைக் காண்பிப்போம் என, அரச பேச்சாளர்கள் பலரும் அறிக்கைகளுக்கு மேல் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள்.

இன்று கூடும் நாடாளுமன்றத்தில் அரசின் பெரும்பான்மையை காண்பிப்போம் எனவும், முதலில் சபாநாயகரை வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் பலமுள்ள அரசை அமைப்போம் எனவும், அமைச்சர் அனுரா பண்டார நாயக்க அறைகூவல் விடுத்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காண்பிப்பதற்குத் தயார் என, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியிருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மூவருக்கும், அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளை வழங்கி அவர்களை அரசில் இணைத்துக் கொள்வதற்கு முயற்சிகள் நடப்பதாகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், ஓரிரு வாரங்களாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

இது தொடர்பாகப் பல சுற்றுப் பேச்சுக்களும் நடைபெற்றன. அரசின் மூத்த அமைச்சர்கள் இதற்கான பல பிராயத்தனங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சின் முக்கிய அமைச்சர்கள் பலர் கடந்த வாரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் இன்று பதவிப் பிரமாணம்

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் 6 பேரும் இன்று சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.ஆர். மித்திரபால, நிர்மல் கொத்தலாவல, ஜே.வி.பி. தேசியப் பட்டியலில் தெரிவாகிய இருவர், முகமட், முஸ்ஸமில் ஆகியோரும்,

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பஸீர் சேகுதாவூத், சட்டத்தரணி நஜீம் முஹி மற்றும் அலிசாஹிர் மௌலானாவின் இடத்திற்குத் தெரிவான மயோன் முஸ்தபா ஆகியோரே இன்று சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமானம் செய்யவுள்ளனர். (தே)

# ரணிலைப் பதவி விலகுமாறு உறுப்பினர்கள் வலியுறுத்து

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதாக, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அல்மொன் பீரிஸ் தெரிவித்தார்.

புதிய கட்சித் தலைவராக - தற்போதைய பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவு செய்யப்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தனது பதவியில் இருந்து ராஜினாமாச் செய்வதற்கு மறுப்பாரேயானால், அவருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு நடவடிக்கையாக கட்சி மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அல்மொன் பீரிஸ் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்க - தான் எதிர்கொண்ட 17 தேர்தல்களின் 15 தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்துள்ள அல்மொன் பீரிஸ், தலைமைப் பதவியை எவ்வாறு தக்கவைப்பது என்பதைக்கூட அறியாதவர் அவர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறை 3 ஆம் வருட மாணவர்கள் நேற்று மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் வெறிச்சோடிப்போயிருக்கும் விரிவுரை மண்டபம்.

# 12 ஓட்டங்களால் இந்தியா இலங்கை அணியிடம் தோல்வி!

(தம்புள்ள)

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 'பி' பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற



போட்டியில் இந்திய அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையிடம் போராடித் தோற்றது.

இரு அணிகளுக்கும் இடையே நேற்றுமுன் தினம் நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற் சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப் பெடுத்தாடியது. இதில் சிறப்பாக விளையாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புககு 282 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து விளையாடிய இந்திய அணி வெற்றிபெறக் கடுமையாகப் போராடியது.

இதன் காரணமாக வெற்றி இலக்கை ஏறக்குறைய நெருங்கிய இந்திய அணி மோசமான தோல்வியைத் தவிர்த்தது. 50 ஓவர்களின் முடிவில் இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு 270 ஓட்டங்கள் எடுத்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி கடைசிக்கட்டத்தில் அபாரமான முறையில் ஓட்டங்கள் குவித்ததன் காரணமாக வலுவான இலக்கை எட்டியது. கடைசி 10 ஓவர்களில் 83 ஓட்டங்களை இலங்கை அணி குவித்தது. ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 58, சங்ககார 52 ஓட்டங்களைப் பெற்று, இலங்கை அணி இந்த இலக்கை எட்ட உதவினர்.

4 ஆவது விக்கெட்டுக்காக இந்த இருவரும் 117 ஓட்டங்களைச் சேர்த்து அணிக்கு வலுச்சேர்த்தனர்.

இந்திய அணியின் பாலாஜி, பதான் இருவரும் தொடக்கத்தில் சிறப்பாகப் பந்துவீசினர். இந்த இருவரின் பந்துவீச்சை எதிர்த்து இலங்கை அணியின் தொடக்க வீரர்களான ஜெயந்த, குணவர்த்தன இருவரும் ஓட்டங்களைக் குவிக்க தடுமாறினாலும், விக்கெட்டை இழக்காமல் நிதானமாக விளையாடினர்.

முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 63 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது இந்திய அணிக்கான முதல் விக்கெட்டை பாலாஜி வீழ்த்தினார்.

அடுத்து 2 ஆவது விக்கெட்டுக்கு இணைந்த குணவர்த்தன, அத்தப்பத்து ஜோடியும் தங்கள் பங்குக்கு சிறப்பாக விளையாடியது.




2 ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 65 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஸ்கோர் 128 ஆக இருந்தபோது குணவர்த்தன ஆட்டமிழந்தார். அவர் 79 பந்துகளில் 49 ஓட்டங்களை எடுத்தார். அடுத்ததாக அரைச்சதம் எடுத்திருந்த நிலையில் கப்டன் அத்தப்பத்து ரன் அவுட்டானார்.

இந்த நிலையில் இலங்கை அணியின் ஸ்கோர் உயரக் காரணமாக இருந்த ஜெயவர்த தன, சங்ககார ஜோடி இணைந்தது. இருவருடைய மிகச்சிறப்பான ஆட்டம் இலங்கை அணிக்கு பெரிதும் உதவியது. கடைசி 10 ஓவர்களில் அதிரடியாக ஓட்டங்களைக் குவிப்



பதில் ஈடுபட்டது இந்த ஜோடி.

49 ஆவது ஓவரில் சங்ககார பதானின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 54 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 57 ஓட்டங்களை எடுத்தார்.

ஷேவாக்கின் பந்தில் ஒரு அபாரமான சிக்ஸரை அடித்த ஜெயவர்த்தன- 49 பந்துகளில் 58 ஓட்டங்களையும், டில்ஷான் 7 ஓட்டங்களையும் எடுத்திருந்தபோது 50 ஓவர்கள் முடிவுக்கு வந்தது. அப்போது இலங்கை அணியின் ஸ்கோர் 4 விக்கெட் இழப்புக்கு 282. இந்திய அணியில் பதான், பாலாஜி இருவரும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். மற்ற 2 விக்கெட்டுக்களும் ரன் அவுட்டாக்கப்பட்டது.

283 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு இந்திய அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இந்திய அணியின் துடுப்பாட்டம் வலுவானதாக இருந்ததால், வெற்றி இலக்கை இந்திய அணி எட்டிவிடும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் தொடக்கத்தில் இந்த நம்பிக்கைக்கு பெருத்த அடி விழுந்தது. யாரும் எதிர்பாராத விதமாக தொடக்கவீரராக களமிறங்கிய பார்த்தீவ் பட்டேல், சச்சின் ஜோடி பிரகாசிக்கவில்லை. சச்சின் 11 ஓட்டங்களிலும், பட்டேல் 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 8 ஓவர்களில் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் என்ற நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில் ஷேவாக், கங்கூலி இருவரும் இணைந்தனர். தொடக்கத்தில் ஏற்பட்ட



சரிவை இந்த ஜோடி சரிக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டது. இதற்கு ஓரளவு பலனும் கிடைத்தது. ஸ்கோர் 71 ஆக இருந்தபோது மற்றொரு பெரிய சரிவை இந்தியா சந்தித்தது.

ஷேவாக் 37 ஓட்டங்களில் இருந்தபோது துரதிஷ்டவசமாக ரன் அவுட்டானார். அடுத்த ஓவரிலேயே கங்கூலியும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, 71 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் என்ற மிகப்பெரிய சரிவை இந்தியா சந்தித்தது. இந்த நிலையிலிருந்த இந்திய அணியை, இலங்கை அணிக்குச் சவாலான நிலைக்கு ராவிட், யுவராஜ்சிங் ஜோடி கொண்டுசென்றது.

இருவரும் நிதானமாக விளையாடி இலங்கை அணிக்கு சோதனையைக் கொடுத்தனர். ஐந்தாவது விக்கெட்டுக்கு இருவரும் 133 ஓட்டங்களைச் சேர்த்தனர். 15 ஆவது ஓவரில் இணைந்த இந்த ஜோடி 40 ஆவது ஓவர் வரை இணைந்து விளையாடியது.

41 ஆவது ஓவரில் யுவராஜ்சிங் 47 ஓட்டங்களுடனும், 46 ஆவது ஓவரில் ராவிட் 82 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க வெற்றியை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த இந்திய அணிக்குப் பின்னடைவு ஏற்பட்டது.

கைஃப் தன் பங்கிற்கு 22 ஓட்டங்களையும், பாலாஜி 10 ஓட்டங்களையும் எடுத்து வெளியேறினர்.

கடைசியில் பதான் 15 ஓட்டங்களையும், சகீர்கான் ஓட்டமெதுவும் எடுக்காத நிலையிலும் 50 ஓவர்கள் முடிவுக்கு வந்தபோது இந்திய அணியின் ஸ்கோர் 270 ஓட்டங்களுக்கு 8 விக்கெட் ஆக இருந்தது. இதனால் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வென்றது.

இலங்கை அணியின் சொய்ஸா 3 விக்கெட்டுக்களையும், வாஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

## உதைபந்தாட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் அனுமதியுடன், பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் - வதிரி தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று -

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் - றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம் மோதும்.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென் சேவியர் 'ஏ' அணியை எதிர்த்து, விக்கிரமன்ஸ் 'ஏ' அணி மோதவுள்ளது. (13)

## கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் அணி வெற்றி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற மானிப்பாய் பிரதேசசபை மற்றும் சுன்னாகம் பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கு இடையேயான 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் பிரதேசசபை அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் பிரதேசசபை அணி 15 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 93 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பிரதேசசபை அணி 3 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.(100)

## 17 வயதுக்குட்பட்டோருக்கான மாகாண மட்ட உதைபந்தாட்டம் சென்.பற்றிக்ஸ் அணி சம்பியன்!

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்திய 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் - திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி முதலாமிடத்தினையும், மன்னார், வங்காலை சென். ஆன்ஸ் வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

சனி, ஞாயிறு தினங்களில் திருகோணமலை மெக்கெய்சர் மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி வங்காலை சென். ஆன்ஸ் வித்தியாலயத்தை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு வடக்கு-கிழக்கு சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான போட்டியில் திருமலை கிண்ணியா மத்திய கல்லூரி மூன்றாமிடத்தினை தெரிவு செய்வதற்கான போட்டிக்குச் சமூகமளிக்காமை காரணமாக, மட்டு. சிவானந்தா வித்தியாலயத்திற்கு வெற்றி வழங்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகவும், திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி இரண்டாமிடத்தினையும், மன்னார் புனித சவேரியார் பாடசாலை மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

## அஸ்ரா கிண்ண முதற்சுற்றில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸால் வெற்றிபெற்றது!

சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் - பெரியபுலம் மகாவித்தியாலய அணிக்கும் இடையில் நடைபெற்ற அஸ்ரா கிண்ணத்துக்கான முதற் சுற்று ஆட்டத்தில் பெரியபுலம் மகா வித்தியாலய அணியை தோற்கடித்து சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இலகுவாக இனிங்ஸ் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி அணியினர் முதலில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தை துடுப்பெடுத்தாடப் பணித்தனர்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் மகாவித்தியாலம் 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 33 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. சென்ஜோன்ஸ் வீரர் ஹரி பிரணவன் 3 விக்கெட்டுக்களையும், வென்சகார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் வென்சகார் 72 ஓட்டங்களையும், நிமல்ராஜ் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ந்து இரண்டாம் இனிங்ஸினை ஆடிய பெரியபுலம் மகா வித்தியாலயம் 17 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தமையால் 117 ஓட்டங்களாலும் ஒரு இனிங்ஸாலும் தோல்விகண்டது. இதில் வென்சாகர் 2 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஹரி பிரணவன் 2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. சென் ஜோன்ஸ் கல்லூரி இது வரை சந்தித்த 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (58)

## பழனி - பாபு சுழல் கிண்ணத்தை உதயசூரியன் அணி கைப்பற்றியது!

(யாழ்ப்பாணம்)

ஐக்கியதீப விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்கள் கொண்ட பழனி - பாபு ஞாபகார்த்த சுழல் கிண்ணத்தை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி தட்டிச்சென்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் எஃப்ரார் விளையாட்டுக் கழக அணியை - உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 85 ஓட்டங்களால் தோற்கடித்து இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியின்படி உதயசூரியன் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட் இழப்புக்கு 163 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக 6 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 35 ஓட்டங்களைப் பெற்ற உதயசூரியன் அணி வீரர் எஸ்.யேசுபாரத் தெரிவுசெய்யப்பட்டதுடன், சிறந்த பந்துவீச்சாளராக யே.கோமஸ் கொலசியர் தெரிவுசெய்யப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (113)




## அரையிறுதிப் போட்டிக்குள் பிரேசில் அணி நுழைந்தது




(லிமா)

பெருவில் நடைபெற்றுவரும் கோபா அமெரிக்கக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட பிரேசில், கொலம்பிய அணிகளும் தகுதிபெற்றன.

நேற்று நடந்த போட்டியில் மெக்சிக்கோ அணியை 4-0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்ததன்மூலம பிரேசில் அணி அரையிறுதி வாய்ப்பைப் பெற்றது.

பிரேசில் வீரர் அட்றியானோ 2 கோல்களை அடித்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இன்னொரு காலிறுதிப் போட்டியில் கோபா அமெரிக்கா தற்போதைய சம்பியனான கொலம்பிய அணி, கோஸ்டாரிக்காவை 2-0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்து அரையிறுதி வாய்ப்பைப் பெற்றது.



அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீன அணியை எதிர்த்து பிரேசில் அணி விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வைத்தியசாலைகளுக்கு அருகில் வீடமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தவும்

## - பொது தாதியர் சங்கம் கோரிக்கை

தாதியர்களுக்கு அவர்கள் கடமை புரியும் வைத்தியசாலைக்கு அருகாமையில் வீடு இல்லாத காரணத்தினால், பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆகவே, வைத்தியசாலைகளுக்கு அருகாமையில் வீடமைப்புத் திட்டத்தினை உருவாக்குமாறு அரசாங்கத்திடமும், வீடமைப்பு அமைச்சரிடமும் பொது தாதியர் சங்கம் கேட்டுள்ளது.

இது சம்மந்தமாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

இரவு நேர வேலையில் ஈடுபடும்போதும், காலை 7 மணிக்கு சேவைக்கு வரும்போதும் பல இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. பல மைல் தொலைவிலிருந்தும் தாதியர்கள் கடமைக்கு வருகிறார்கள். அதுமட்டுமன்றி போக்குவரத்து சீரின்மையாலும், நெடுந்தூரம் பிரயாணம் செய்து வருபவர்கள் மிகவும் களைப்படைந்த நிலையிலேயே கடமைக்கு வந்து செல்கிறார்கள்.

ஆனால், நோயாளர்களின் பொறுப்பு சம்மந்தமாக அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் தாதியர்கள் சுறுசுறுப்புடன் இருக்க வேண்டுமென்பதை அரசாங்கம் அறியும்.

ஆகவே, இந்த வீட்டுத் திட்டத்தினை நடைமுறைபடுத்துவதற்கு நிதி நெருக்கடிகளையும், நாம் நன்கு அறிவோம். இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுவதற்குரிய அனுமதியை வழங்கினால், நிதிநெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்கான யோசனைகளை முன்வைக்க பொது தாதியர் சங்கம் தயாராகவுள்ளதாக அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

# போக்குவரத்துப் பிரச்சினைகள்; கூட்டமைப்பு எம்.பி. ஆராய்வு!

போக்குவரத்து சேவையில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக உரிய இடங்களில் தொடர்புகொண்டு தம்மால தீர்க்க முடிந்தவற்றைத் தீர்ப்பது சம்மந்தமாக கவனத்தில் கொள்வதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

'மக்கள் நட்பான போக்குவரத்து' சேவையைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை அறிந்து கொள்ளும் முகமாக கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கோண்டாவில் பஸ் டிப்போவுக்குச் சென்று பணிப்பாளர் கணேசபிள்ளை தலைமையில் அனைத்துப் பிரிவுகளை சேர்ந்தோரையும் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பூரண சேவையை வழங்கி, மக்களின் நல்லாதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்ற சம்பவங்கள் குறித்து பணிப்பாளர் எடுத்துக் கூறினார்.

இதன்போது தற்போது போக்குவரத்துக்குத் தேவையான பஸ்கள் எவ்வளவு எனவும், சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பஸ்கள் - பழுதடைந்த பஸ்கள் எவ்வளவு என்பது குறித்து விரிவாக எடுத்துக் கூறியதுடன் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் இது குறித்து, தான் உரிய இடங்களுடன் தொடர்பு கொண்டு தம்மால் தீர்க்கமுடிந்தவற்றைத் தீர்ப்பது தொடர்பாக கவனமெடுப்பதாகவும் தெரிவித்தார்.

# - ரெலோ இயக்கத்தின் - பொதுக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

(யாழப்பாணம்)

ரெலோ இயக்கத்தின் 7ஆவது தேசிய மாநாட்டுக்கான பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் மாவட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றது.

இறுதியாக யாழ்.மாவட்டத்துக்கான பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த 17ஆம் திகதி கட்சியின் யாழ்.மாவட்டச் செயலகத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தலைமையில நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்துக்கான அமைப்பாளராக ந.விந்தன் கனகரத்தினமும் உதவி அமைப்பாளராக கே.ரவியும் கட்சி உறுப்பினர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களோடு சட்டத்தரணியும்-ரெலோ முதல்வருமான என்.சிறீகாந்தா, நாடாளுமன்றஉறுப்பினர் சிவாஜிலிங்கம், ஏ.தவநாதன் உட்பட மொத்தம் 12 பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# வலி.வடக்கு உள்ளூராட்சி வார நிகழ்வு

# விளையாட்டுப் போட்டியில் இளையோரை சேர்த்துக் கொள்ளப்படாமைக்கு அதிருப்தி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் வலிகாமம் -வடக்கு பிரதேச சபையினர் இளையோருக்கான, விளையாட்டுக்களை சேர்த்துக் கொள்ளவில்லையெனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, பிரதேச சபைகள் ஒவ்வொன்றும் தமது பிரிவுகளுக்குப்பட்ட பொது மக்களிடையே விளையாட்டுப் போட்டிகள், கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தி பரிசளித்து வருகின்றன. அநேகமான பிரதேச சபைகள் அனைத்து வயதினரும் பங்கேற்கத் தக்க வகையிலேயே போட்டிகளை நடாத்தி வருகின்றனர்.

ஆனால், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையினர் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே போட்டிகளை நடாத்தவுள்ளனர். தாச்சிப் போட்டி, மென்பந்து கிரிக்கெட்போட்டி, கரபந்தாட்டப்போட்டி, வேகநடைப் போட்டி, மாட்டுவண்டி சவாரிப்போட்டி, பலூன் உடைத்தல் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி என நடாத்தப்படவுள்ள இந்தப் போட்டிகள் எவற்றிலும் 45 வயதுக்குக் குறைந்தவர்கள் பங்குபற்ற முடியாதுள்ளது.

சனசமூக நிலையங்களைப் பொறுத்தவரையிலே விளையாட்டுத் துறையிலே இளைஞர்களே அதிகம் பங்கெடுக்கின்றனர். இந்த நிலையில் இளைஞர் பங்குபற்ற முடியாத விதத்திலே போட்டிகளை ஒழுங்கு செய்துள்ள வலிகாமம் - வடக்கு பிரதேச சபையினர் மீது விளையாட்டுத் துறை சார்ந்த இளைஞர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் இவ்வாறான நிலையிலேயே போட்டிகள் நடாத்தப்பட்டதாகச் சுட்டிக்காட்டும் இளைஞர்கள் அந்தப் போட்டிகள் அநேகமானவற்றுள் ஓரிருவரே பங்குபற்றியதாகவும் தெரிவித்தனர். எனவே, இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபைச் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நேற்றுடன் நிறைவு பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (94)

# வெட்டுக்களிக்குள அணைகளை சேதப்படுத்தும் கால்நடைகள்

## கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வரும் வெட்டுக்களிக் குளத்தைச் சுற்றிப் போடப்படும் மண் அணைகளை - கால்நடைகள் சிதைவடையச் செய்வதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக உரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெடுந்தீவுப் பகுதியில் கால்நடைகள் அனைத்தும் கட்டாக்காலிகளாக விடப்பட்டே வளர்க்கப்படுவதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சேதப்படுத்தப்படும் அணைகளை மீளவும் திரும்பத் திரும்பப் போடுவதானால் செலவும் அதிகரித்துச் செல்லும் நிலை ஏற்படுகிறது.

மண் அணைகளில் புற்கள் முளைக்கும் வரைக்கும், குளத்தின் புனரமைப்பால் பயனடையும் அந்தப் பகுதி பொதுமக்களும், கால்நடைகளைக் கட்டிவளர்ப்பதன் மூலமே இதற்குத் தீர்வுகாணமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (113)

# சிறுவர் உரிமைகள் தொடர்பாக இருநாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

மதகுருமாருக்கான சிறுவர் உரிமைகள் விழிப்புணர்வு தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 1 மணிவரை இல.464 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின், பட்டப்படிப்பு பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில் இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க, முஸ்லீம் மதங்களைச் சேர்ந்த தலா இரண்டு மதகுருமாரைப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாகத் தெரிவுசெய்து அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்டத்தினுள் சகல பிரதேச செயலர்களுக்கும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு இணைப்பாளர் கடிதமூலம் தெரியப் படுத்தியுள்ளார். (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானம் சிரமதானம்

சாவகச்சேரி நகரசபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, நாளை மரம் நாட்டு விழாவும், உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கண்ணாடிப் பிட்டி இந்து மயானம் சிரமதான மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயமாக இந்தப் பகுதி காணப்படுவதனால், இறுதிக்கிரியைகளுக்காக மட்டுமே இந்த இடத்துக்குச் செல்லமுடியும். இதனால் இங்கு பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவுருவப்படம் அன்பளிப்பு

எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு, சுவாமிகளின் திருவுருவப் படத்தை கே.கே.எஸ் வீதியிலுள்ள மில்க்வைற் சோப் தொழிலகத்திலும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாமெனத் தொழிலதிபர் இ.தவகோபால அறிவித்துள்ளார்.

சகல பாடசாலைகளும், இந்து சமய இளைஞர் மன்றங்களும், சனசமூக நிலையங்களும் நேரில் வந்து திருவுருவப்படத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு மகளிர் கல்லூரி கல்விக் கண்காட்சி

நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 11.30 மணிக்கு கல்விக்கண்காட்சி இடம் பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அருட்சகோதரி இக்னேசியஸ் சூசைப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்தக் கண்காட்சியில், தீவகவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஸ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (113)

## மட்டுவிலில் குரங்குகளின் தொல்லை அதிகரிப்பு

தென்மராட்சி பிரதேசங்களில் பெருகி வரும் குரங்கினங்களின் அட்டகாசத்தினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இரவில் பன்றிகளின் தொல்லை, பகலில் குரங்குகளின் தொல்லை என மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்க நேரிடுகின்றது. கூட்டங் கூட்டமாக வரும் குரங்குகள் தோட்டங்களில் பயிர்களை மட்டுமல்லாது வீட்டிலுள்ள மா, வாழை, முருங்கை மற்றும் பயன்தரு மரங்களையும் சேதப்படுத்தி வருகின்றன.

அதுமட்டுமல்லாது வீடுகளின் கூரைவழியே தாவித்தாவி ஓடுவதால் - ஓடுகள் உடைவதும், நாளாந்த நடவடிக்கையாகிவிட்டது. கல்வயல், நுணாவில்,மட்டுவில், சரசாலைப் பகுதிகள்ல் இந்தக்குரங்குகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (24)

## மூத்தநயினார் ஆலய மஹோற்சவம்

கரணவாய் வாய்க்காற்தெரு மூத்த நயினார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் உற்சவம் நடைபெறும். 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள்சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (17)

## வலுவிழந்தோருக்கான விளையாட்டு விழா

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 17 வது ஆண்டு நிறைவுநாளை முன்னிட்டு, வலுவிழந்தோருக்கான விளையாட்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை யு.எஸ்.எய்ட் மிசன் பணிப்பாளர் கலாநிதி கரல் பேக்கரும், கௌரவ விருந்தினராக இலங்கை மோட்டிவேசன், அறக்கொடை நிதியத்தின் உதவிப்பணிப்பாளர் இராணி சாமுவேலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வீதி நிகழ்வுகளாக வலுவிழந்தோருக்கான சைக்கிள் - முச்சக்கர வண்டி ஓட்டம் மற்றும் ஆரம்ப நிகழ்வுகள் இல.05 பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி அலுவலகத்தில் காலை 8.30 மணிமுதல் பகல் 1.30 மணிவரை இடம்பெறும்.

தடகள நிகழ்வுகளும், பரிசளிப்பும் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மாலை 1.45 மணி முதல் மாலை 4.30 மணிவரைக்கும் இடம் பெறவுள்ளது. (113)





நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட கலைஞர்களையும், அங்கு நடைபெற்ற சுளகு நடனக் காட்சியையும் படங்களில் காணலாம்.




# டிஜிற்றல் வானொலிப்பெட்டி

ஐரோப்பிய நாடுகளில் அண்மையில் பாவனைக்கு வந்துள்ள டிஜிற்றல் வானொலிப்பெட்டி இதுவரை காலமும் பாவிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளைவிட மிகவும் சிறியதாகவும், அத்துடன் பல தொழில்நுட்ப திறன்களை தன்னகத்தே கொண்டதாகவும் காணப்படுகின்றது.



கடந்த மாதத்தில் மட்டும் 600 ஆயிரம் டிஜிற்றல் வானொலிப் பெட்டிகள் விற்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 100 மில்லியன் வானொலிப் பெட்டிகள் தயாரிப்பில் உள்ளன. இதிலே காணப்படுகின்ற சிறப்பம்சம் என்னவென்றால், எம்.பி.3 பிளேயர் காணப்படுவதாகும்.

ஏறக்குறைய 50 ஸ்ரேலிங் பவுன்ஸ் வரையில் விற்கப்பட்ட இந்த வகை வானொலிப் பெட்டிகளின் விலை சற்று அதிகரித்துள்ளது. இதில் காணப்படும் அலை இயக்கம், டிஜிற்றல் ஒலி அலை இயக்கம் ஆதலால் இது டிஜிற்றல் அலை சேவைகளை மட்டுமே உணரக்கூடியது. இதேவேளை, இந்தவகை வானொலிப் பெட்டிகள் - மொபைல் தொலைபேசிகளிலும், இன்ரநெட்களிலும் புகுத்தப்படவிருக்கின்றன.

# றோயல் பறவை

ஒஸ்பிறே என்ற பறவை முதல் முறையாக வேல்ஸ் என்ற இடத்தில் கூடுகட்டியிருக்கின்றது. இந்தப் பறவை ஒரு றோயல் சொசைட்டியுடைய பறவையாக இருக்கின்றது. ஆகவே, அவர்கள் இந்தப் பறவையினைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள். ஐரோப்பாவில் மட்டும் மொத்தமாக 200 சோடிப் பறவைகள் மட்டுமே இருக்கின்றன.



இதனுடைய விஞ்ஞானப் பெயர் - பண்டியன. இதனுடைய பிரதானமான உணவு மீன் ஆகும். 1954 ஆம் ஆண்டில் தான் இந்தப்பறவைகள் முதன்முதலில் ஸ்கொட லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனுடைய கண்டுபிடிப்பின் 50 ஆவது ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் முகமாக, கனவான்கள் கழகம் சிறப்பான நிகழ்ச்சிகளைக் கொண்டாட இருக்கின்றது. இதனுடைய முட்டைகளை எடுத்து, செயற்கைமுறையில் பொரிக்க வைத்து, இந்த அரிய பறவைகளை உருவாக்குவதற்கான திட்டம் இருக்கின்றது.

அது எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்பது தெரியாது என்கின்றார்கள்.

ஆனாலும், இந்தவகையான பறவைகள் கிரேக்கத்தில் அதிகமாகக் காணப்படுவதாகவும், இவை ஏதென்ஸ் நகரத்தின் ராஜாக்கள் என அழைக்கப்படுகின்றது. ◆

# சேக்கிட் மையுடன்

இலத்திரனியல் சாதனங்களில் பொருத்தப்படுகின்ற சேக்கிட் போட்கள் - கூடுதலாக செப்பு முலாமிடப்பட்டதாகவே காணப்படுகின்றன.



ஆனால், தற்போது புதிய சிலமுறைகள் இந்தப் போட்களில் வர இருக்கின்றன. இவை ஒரு விசேட வகையான மையினைக் கொண்டதாக அமைக்கப்படுகின்றன. இவை தற்போது வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் அதிகம் பாவிக்கப்படுகின்றன. மொபைல் தொலைபேசிகளில் தற்போது இவ்வகை போட்களே அதிகம் காணப்படுகின்றன.

எல்லா சாதனங்களும் 2006 ஆம் ஆண்டளவில் இந்த இலத்திரனியல் போட்டினையே பயன்படுத்தும் என தொழில்நுட்பவியலாளர்கள் கருதுகிறார்கள். இங்கே பாவிக்கப்படுகின்ற மைகள் - ஒரு இரசாயனத் தயாரிப்பாக இருக்கின்றன.



எதிர்காலங்களில் குரோமியம் கூட இங்கே பயன்படுத்தப்படுகின்ற நிலை வரும் என்கிறார்கள். மொபைல் தொலைபேசிகளில் இவற்றைப் பாவிப்பதன் நோக்கம் - இவை மிகவும் உணர்திறன் கூடியனவாக இருப்பதும், சிக்னல்களை உடன் எடுப்பதுமாகும்.

# ஸ்மார்ட் பைக்

புதிய வகை சைக்கிள்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஓய்பைக் என்று அண்மையில் சந்தைக்கு வந்திருக்கின்ற இவை - உண்மையில் இலத்திரனியல் சைக்கிள்கள்தான். இவற்றிலே காணப்படும் மொபைல் தொலைபேசிகள் மிகவும் சிறப்பானவை. மிகவும் துல்லியமானதாக இருக்கின்ற இந்தவகை மொபைல் தொலைபேசிகளுக்கு, 10 ஸ்ரேலிங் பவுண்கள் வருடாந்தக் கட்டணமாக அறவிடப்படுகின்றது.



சைக்கிள்களைப் பூட்டும்போது, போனும் தன்னிச்சையாகப் பூட்டிக் கொள்கின்றன. இத்தகைய சைக்கிள்களைப் பார்க் செய்யும் கட்டணம் இந்தச் சைக்கிள்களைத் தயாரிக்கும் நிறுவனத்தால் இலவசமாக்கப்பட்டிருக்கின்றது.



பிரான்ஸ் நாட்டில் காணப்படுகின்ற ஒருவகையான சைக்கிள்கள் கார்ட் முறை மூலம் இயங்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதேவேளை, இந்தவகையான சைக்கிள்களை வாடகைக்கு விடுகின்ற திட்டமும் உள்ளது.

அதிலே 0-15 நிமிடத்துக்கு 30 பென்னியும், 16-30 நிமிடத்துக்கு 80 பென்னியும், 31 நிமி

# புற்றுநோய்க்கு புதிய சிகிச்சை

ஜ.எம்.எனப்படும் பக்ரீரியா - புற்றுநோயைக் குணப்படுத்தக்கூடியது எனத் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இவ்வகையான பக்ரீரியாக்கள் - ரியூமர் குளோசிஸ் நோயைக் குணப்படுத்த வல்லன.

இந்தப் பக்ரீரியாவில் காணப்படுகின்ற அணுக்கள் - புற்றுநோய்க் கலங்களை கொல்கின்றன. இது ஆரம்பத்தில் ரியூமர் நோய் உள்ள எலிகளில் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.



பின்பு ரியூமர் நோயுள்ள மனிதர்களுக்கு பரிசோதிக்கப்பட்டது. இதன் மூலம் முற்றுமுழுதாக புற்றுநோய் குணமடைகின்றதோ இல்லையோ - நோயின் தாக்கத்தையும், அளவையும் இது குறைக்கத்தான் செய்கிறது.

10 மிருகங்களில் செய்யப்பட்ட ஆராய்சி களில் - 8 மிருகங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இதேவேளை 12,500 ஐரோப்பிய மக்களில், ஏறக்குறைய ஐயாயிரம் பேர் வரை இறந்திருக்கிறார்கள். ஆனால், 50 வயதுக்குமேல் புற்றுநோய் வருபவர்களுக்கு இந்த வகையான சிகிச்சை முறை அவ்வளவாக பயனளிக்காது என மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

# விண்வெளியில் ரோபோ

மிகவும் உத்வேகத்துடன் விண்வெளி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அமெரிக்க விண்வெளி ஆய்வுமையம் - கிரகங்களை ஆராயச்சி செய்கின்ற விடயத்தில் புதிது புதிதாக சில தொழில்நுட்பத் திறன்களைப் புகுத்துகின்றது. முதற்தடவையாக விண்வெளி ஆய்வுக்கு இயந்திர மனிதர்களைக் களமிறக்கிய இந்த நிறுவனம் - இப்போது மனித ஆராய்ச்சியாளர்களை நம்புவதற்குத் தயாரில்லை.



நாஸாவின் இந்த முடிவு - பல விஞ்ஞானிகளை யோசிக்க வைத்திருக்கின்றது. ஆனால், நாஸா விஞ்ஞானிகளுக்கான கூட்டத்தில் கொலம்பிய விண்வெளிக்கல விபத்து, உண்மையில் மனித விஞ்ஞானிகளின் பொறுப்பற்ற தன்மை எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஆனால், இயந்திர மனிதர்களை இந்த விண்வெளி ஆய்வுக்குப் பயன்படுத்தும்போது ஏற்படும் செலவு மிகக்கூட என்ற கருத்தும் இருக்கின்றது. இந்த இயந்திர மனிதர்கள் சூரிய சக்தியினால் இயங்கக்கூடிய மின்கலங்களைக் கொண்டிருக்கின்றன.



சில இயந்திர மனிதர்கள் - பூமியிலிருந்து ரிமோட் மூலம் இயக்கக்கூடியவாறுள்ளன. தற்போது இந்த வகையான ரோபோக்கள் எதிர்நோக்கும் பிரச் சினை என்னவென்றால், அதிக வெப்பத்தினால் இவற்றில் காணப்படுகின்ற இலத்திரனியல் சாத னங்கள் செயலிழப்பதாகும். இது நாஸாவுக்குப்புதிய தலையிடியைக் கொடுத்திருக்கின்றது.

யாழ்ப்பாணம்

## திரை விமர்சனம்

### நியூ

படம் - திரைக்கதைக்காகத்தான் ஓடுகின்றது என்பதனை மீண்டும் நிரூபித்திருக்கின்ற படம் இது.



எஸ்.ஜே.சூர்யா - இயக்குநர் சேரனுக்குப் பிறகு இயக்குநர்கள் கதாநாயகர்களாக முடியும் என்பதனைக் கூறியிருக்கிறார் இந்தப் படத்தின் மூலம்.

இந்தப் படத்தில் வருகின்ற இரட்டை அர்த்த வசனங்களை, சென்சர் போர்ட் எப்படி விட்டு வைத்தது என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது.

எட்டுவயதுப் பையன் பப்பு (மாஸ்டர் பாரத்)வினை, அவனது தாய் தேவயானி எப்பொழுதும் திட்டுவதாக இருக்கிறார். தாயின் கொடுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்யப்போகும் பப்புவை, விஞ்ஞானி மணிவண்ணன் காப்பாற்றுகிறார்.



அவனை வளர்த்து 28 வயது வாலிபன் எஸ்.ஜே.சூர்யாவாக்குகிறார். இவர் உண்மையில் மனதளவில் 8 வயதுப் பையன்தான். பொம்மைக் கடை அதிபர் நாசர் - சூர்யாவுக்கு வேலை கொடுக்கிறார். அங்கே அவரது மகள் சிம்ரனுக்கும், சூர்யாவுக்கும் காதல் ஏற்படுகின்றது.

இதே நிலையில், சூர்யா தன்னைப் பழையபடி சிறுவனாக மாற்றும்படி மணிவண்ணனிடம் கேட்கிறார். இதன் மூலம் இரவில் பெரியவனாகவும், பகலில் சிறுவனாகவும் மாற்றுகின்றார். இதேவேளை சூரியாவை சிம்ரன் மணந்துகொள்கிறார்.

பகலில் மாணவனாகவும், இரவில் கணவனாகவும் போராடுகின்றார். இந்த விடயம் சிம்ரனுக்கு ஏதோ வழியில் தெரியவருகின்றது. இதனைச் சூர்யா எப்படிச் சமாளிக்கின்றார் என்பது கிளைமார்க்ஸ். கிரண் ஒருபாடற் காட்சியில் வருகின்றார்.

கருணாஸ் - படத்துக்கு உண்மையில் தேவையில்லை. வாலி, வைரமுத்துவின் பாடல்களுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருக்கிறார்.

ரீமிக்ஸ் பாடல்கள் சிறப்பாக இருக்கின்றன. நடனம் பிருந்தா மற்றும் ஒளிப்பதிவு குகன் மிக அருமை. 'பிக்' என்ற ஆங்கிலப்படத்தின் தளுவலாக சூர்யாவுக்கு ஒரு 'நியூ' வெற்றி.

## திமிங்கலத்துடன் போர்



கடல் திமிங்கலங்கள் - பல காரணங்களுக்காக வேட்டையாடப்படுகின்றன. திமிங்கலங்களை வேட்டையாடுவதற்குப் பலமுறைகள் காணப்படுகின்றன. இப்படியாக வேட்டையாடப்படுகின்ற திமிங்கலங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

சில வேட்டைக்காரர்கள் துப்பாக்கியால் சுட்டுத் திமிங்கலங்களை வேட்டையாடுகின்றார்கள். சில பெரிய திமிங்கலங்களை சிறிய துப்பாக்கியால் சுடும்பொழுது அவை தப்புகின்றன. இதனால். தற்போது கிரனைட் லோஞ்சர்களைப் பாவித்துத் திமிங்கலங்கள் வேட்டையாடபபடுகின்றன. சர்வதேச அளவில் திமிங்கலங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.



இதில் ஜப்பான், நோர்வே, தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்திருக்கின்றன. அவை பயனுள்ள முலையூட்டிகளாகிய திமிங்கலங்களை எப்பாடுபட்டாவது பாதுகாக்க வேண்டும் என்பதில் மிக முனைப்பாக ஈடுபட்டுக்கொண்டு வருகின்றன.

அண்மையில் சில நாடுகள் கனடா, கிறீன்லாந்து, ரஷ்யா, அமெரிக்கா ஆகியன - திமிங்கிலங்களை வேட்டையாடுகின்றவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன.

பாரிய திமிங்கலங்கள் வேட்டையாடப்படுவதற்கான காரணமாக, அவை கப்பல்களைத் தாக்குவது என்று கூறப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், சிறிய அளவில் காணப்படுகின்ற திமிங்கலங்கள் ஏன் வெடிவைத்துக் கொல்லப்படுகின்றன என்ற கேள்வி - உலகளாவிய ரீதியில் எழுந்திருக்கின்றது.

இப்படியாகத் திமிங்கலங்கள் மட்டுமல்ல, அவற்றுடன் சேர்த்து எத்தனையோ மீனி

## வங்கிக் கொள்ளை



ஐரோப்பிய நாடுகளில் தானியங்கி காசு எடுக்கின்ற கருவிகள்- தற்பொழுது வாடிக்கையாளர்கள் சிலரினால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது.

இதன் மூலம் வங்கிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையில் ஓர் பனிப்போர் உருவாகியுள்ளது. வாடிக்கையாளர்கள் - தாங்கள் பணம் எடுக்காமலேயே, தங்களின் வங்கிக் கணக்கு மீதி குறைந்திருப்பதைக் கண்டு குழும்பியுள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் - ஹொங்ஹொங் வங்கியின் தானியங்கிப் பணம் எடுக்கும் இயந்திரங்கள் மூலம், 39 மில்லியன் ஸ்ரோலிங் பவுன்ஸ் வரை ஏமாற்றப்பட்டுள்ளது. இதேவேளை, வங்கிகள் எல்லாம் கூடி - 1 நாளைக்கு 500 ஸ்ரொலிங் பவுன்ஸ் மட்டும் தான் தானியங்கி இயந்திரம் மூலம் பெறப்பட முடியும் என்று முடிவெடுத்துள்ளது. இதன் மூலம், பெருவாரியாக இழக்கப்படுகின்ற பணத்தின் தொகையை குறைக்கக்கூடியதாக இருக்கும் என நம்பப்படுகின்றது. ஏ.ரீ.எம் இயந்திரங்களில் போடப்படுகின்ற அதே அட்டைகள் போல போலியாகத் தயாரிக்கப்படுகின்ற அட்டைகள் சந்தையில் உலா வருகின்றன. அத்துடன் சங்கேத குறியீடு கூட திருடர்களால் கண்டறியப்படுகின்றது. இது உண்மையில் நுட்பமான திருட்டுத்தான்.

## மாறும் அணு உலகம்



உலகம் முழுவதும் அணு சக்திப் பாவனைக்கு பல எதிர்ப்பலைகள் கிளம்பியிருந்தது. காலத்தின் தேவையறிந்து ஒருவாறு அணுசக்தியைப் பாவிப்பதால், கிடைக்கக்கூடிய எல்லா நன்மைகளையும் விஞ்ஞானிகள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யா - மிகப்பெரிய அணு உலை ஒன்றை உருவாக்குகின்ற முயற்சியில் இறங்கியிருக்கின்றது. 1978 ஆம் ஆண்டிலிருந்து ரஷ்ய விஞ்ஞானிகள் - அணு ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், 1954 இல் ரஷ்யா அணுப்பாவனையைத் தொடங்கியிருந்தது.



இதேவேளை, உலகின் மிகப் பெரிய அணு உலை உற்பத்தியில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், கனடா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளும் இறங்கியிருக்கின்றன. ஆனால், இது உடனடியாகச் சாத்தியப்படாது என்றும், ஏறக்குறைய 7-8 வருடங்கள் எடுக்கும் எனவும் ரஷ்ய விஞ்ஞானிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மக்களை அணுசக்திப் பக்கம் ஈர்க்கவைத்திருக்கின்றது.

அணுசக்தியின் வெப்பநிலை - மற்ற எரிபொருட்களிலும் பல மடங்கு அதிகமாகும்.

## இரத்தமில்லாத சத்திர சிகிச்சை

தற்போது நடைபெறுகின்ற சத்திர சிகிச்சைகளில், வெட்டுக் காயங்கள் இல்லாமலேயே சத்திரசிகிச்சை பூர்த்தி செய்யப்படுகின்றது. அத்துடன் வெற்றியும் கிடைக்கின்றது.

இதனை நன்கு ஆராய்ந்த அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் - முதலில் இபபடியான செயற்பாடுகள் பன்றிகளிலேயே செய்யப்பட்டதாகவும், அதன் பின்புதான் மனிதர்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.




இப்படியான சத்திரசிகிச்சைகளில் பல இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இங்கே பாவிக்கப்படுகின்ற மினி தொலைகாட்டி - நன்கு உள்ளே இருக்கின்ற உறுப்புக்களைப் பெரிதாக்கிக் காட்டவல்லது. பின்பு சத்திரசிகிச்சை செய்யவேண்டிய இடம் தெளிவாகக் கண்டறியப்பட்டு, உள்ளே அனுப்பப்படுகின்ற கதிர்த்தொழிற்பாட்டு முறை - வெற்றிகரமாக சத்திரசிகிச்சையினைப் பூர்த்தி செய்கின்றது. இது ஓரளவு சுலபமானதாகவும், வெற்றிகரமானதாகவும் இருந்தாலும்கூட, இவற்றினால் பல தீமைகளும் உண்டு.

குறிப்பாக - வயிற்றுப் பகுதியில் காணப்படுகின்ற சில உறுப்புக்கள், இந்தக் கதிர்த்தொழிற்பாட்டினால் பாதிக்கப்படுகின்றன. வாய் மூலம் செய்யப்படுகின்ற புதிய வகை சத்திரசிகிச்சை - கதிர்த்தொழிற்பாட்டிலும் பார்க்க ஓரளவு தாக்கத்தைக் குறைக்கக்கூடியதாக இருக்கும் என்ற கருத்து வைத்தியர்களிடையே நிலவி வருகின்றது.

அழகெழல் ...

சி.சிவானந்தராஜா

# அழகியலூடாக மன எழுச்சிமிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும்

அறுபத்து நான்கு கலைகளையும் பயின்று இன்புற்று உயர்ந்த சமுதாயமாக வாழ்ந்த எம் தமிழச் சமுதாயம், பெரும் போர் அனர்த்தத்தால், எம் சொந்த ஊர்களை இழந்தும், புலம் பெயர்வினாலும் மேற்குலக கலாசார வரவினாலும், இன்றைய நாளின் திரைப்படக் கலாசாரத்தினாலும், எமக்கே உரியதான கலை, பண்பாடுகளை மறந்து எங்கோ அநாகரிகமான ஒரு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக சமூகப் பற்றுள்ளவர்கள் கவலைப்படுகின்றார்கள். உண்மையிலேயே இன்று நாளிதழைப் புரட்டிப் பார்க்கும் ஒவ்வொரு பொழுதும், சமூக வன் செயல்கள் பற்றிய செய்திகளே நிரம்பிக் கிடக்கின்றன. இந்த நிலைகளை யெல்லாம் இல்லா மற் செய்து மகிழ்ச்சியான புத் துணர்ச்சி மிக்க சமுதாயத்தைக் கட்டியமைக்க எதிர்கால சந்ததியினர் மத்தியில் அழகியல் உணர்ச்சியை வளர்க்க வேண்டிய தேவை உள்ளது.

> அன்பு, பாசம், மனிதநேயம் போன்ற நல்ல மனப்பாங்குகளை வளர்த்து, மனித நேயம் நிரம்பிய உற்சாகமான மனிதனை அழகியற் கலைகள் உருவாக்குவதாக கலை ஆர்வலர்கள் கூறுகின்றார்கள். இயந்திரமயமான தொடர்ச்சியான இயக்கத்தால் சோர்ந்து மன உழைச்சல் அடைகின்ற மனிதனுடைய மனதிற்கு, இன்பத்தினை ஊட்டி ஒரு மன ஆறுத்லை இக்கலைகள் வழங்குகின்றன என்று இன்றைய ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

அன்பு, பாசம், மனிதநேயம் போன்ற நல்ல மனப்பாங்குகளை வளர்த்து, மனித நேயம் நிரம்பிய உற்சாகமான மனிதனை அழகியற் கலைகள் உருவாக்குவதாக கலை ஆர்வலர்கள் கூறுகின்றார்கள். இயந்திர மயமான தொடர்ச்சியான இயக்கத்தால் சோர்ந்து மன உழைச்சல் அடைகின்ற மனிதனுடைய மனதிற்கு, இன்பத்தினை ஊட்டி ஒரு மன ஆறுதலை இக்கலைகள் வழங்குகின்றன என்று இன்றைய ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றனர. அந்த வகையில் 'ஷோபனோவர்' என்ற அறிஞர் கருத்துக் கூறும் போது, 'வாழ்வை அதன் துன்பங்களிலிருந்தும் அதன் சோர்விலிருநதும் மீட்டுத்தருவது கலையே' என்று கூறுகின்றார்.

அதேபோலக் கலையானது ஒரு ஆத்ம திருப்தியோடு சம்பந்தப்பட்டதாகும் அதாவது மனிதன் இன்றைய தேவைகளை நிவர்த்தி செய்ய - மாடாய் உழைக்கிறான். ஓய்வெடுக்க அவன் முயலும் போது அவனைச் சூழ தென்னிந்திய சினிமா மற்றும் சின்னத்திரை தொடர் நாடகங்களும் தான் நிறைந் திருக கின்றன. இதனால் கிடைக்கும் சிறிய ஓய்வு நேரத்தையும் அவற்றோடு கழித்து விட்டுப் போகின்ற நிலமை தான் எம்மண்ணில் காணப்படுகின்றது. இதனால் எமக்கே உரியதான 'வசந்தனும், தெம்மாங்கும்' எம்மை விட்டுக் கை நழுவி எங்கோ போய அழிந்து விடும் அபாய நிலையே உள்ளது.

எனவே, இன்றைய இளம் சந்ததியினர் மத்தியில் - கிராமியக் கலைகள் பற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்தி, அவற்றை அழகியற் கல்வியூடாக கற்பித்து வளர்க்க வேண்டிய தேவை உள்ளது. எனவே நாட்டாரியல் பற்றிய ஆர்வத்துடன் மாணர்களை ஈடுப டுத்தி அவர்களைத்தம்சொந்த மண்ணில் கலைகளைப் பேணும் மனப் பாங்கை வளர்க்க வேண்டும். அத்தோடு ஒரு இனத்தின் தேசிய அடையாளங்களில் முக்கியமானது கலை, பண்பாடாகும் எனவே, எம் தமிழ்க் கலைகளை பாது காக்க வேண்டியது எம் பொறுப்பாகும்.

அழகியலூடாக மன எழுச்சி மிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும். ஏனெனில் அழகியல் கலைகள் அனைத்துமே ஒரு உணர்ச்சித் தளத்திலேயே வெளிப் படுத்தப்படும். அதாவது படைப் பாளியிடம் உள்ள உணர்வுகள் பயனாளி (ரசிகன்) வரை கலை ஊடாக கடத்தப்படும் இந்த நிலையில் மனித மாண்புகள் மதிக்கப் படும் கலையூடாக விழுமியப் பண்புகள் பேணப்படும். இந்த வகையிலேயே ஒரு கலைப் படைப்பு ஊடாக அந்த மண்ணின் அன்றைய கால நிகழ்வுகள். வெளிப்படுத்தப்படும் இதனாலேயே கலை வெளிப்பாடுகள் 'காலத்தின் கண்ணாடிகள்' என்பார்கள் உண்மையிலேயே கலைப்படைப் பாளி சமூகப் பிரக்ஞை உடையவனாக இருப்பான். இதனால் அவனது சமூகம் சார்ந்த அந்தக் கறை இருக்கும் இதனால் அவன் சமூக உயர்ச்சியடைவதற்கு தன்னால் ஆனவரை இயங்குவான்.

அழகியற் கலைகளில் ஓவியம் பற்றி எடுத்து நோக்குவோமானால் அது மிகவும் மன எழுச்சி உடையதாகும் எம் நாட்டு ஓவியர் ஒருவர் கூறும் போது 'நான் ஆத்ம திருப்திக்காகவே வரைகினறேன். சமூகப்பயன்பாட்டைப் பற்றிய எண்ணம் எனக்கு இல்லை. முழுக்க முழுக்க ஆத்ம திருப்பிக் காவே, என்கிறார். உண்மையிலேயே நம் சிறார்களின் ஓவியங்களை ஆராய்ந்து பார்த்தால் சிறுவர்களின் மன எழுச்சி புரியும், அவர்களுடயை ஓவியங்களில் தெரியும் சிறுவர்கள் ஓவியங்களை வரையும் போது, தமக்குப் பிடித்தவற்றைப் பெரிதாக வரைவார்கள். உதாரணமாக வீட்டை வரையும் போது வீட்டுக்குள் எரியும் மினசார விளக்கை வெளியே தெரியும் படி வரைவார்கள். அதே போல அவர்கள் காதுத் தூக்கணம், காப்பு, போன்றவற்றைப் பெரிதாகவும் தெளிவாகவும் வரைவர். இதன் ஊடாக நீங்கள் அழகியலில் ஓவியத்தின் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ள முடியும்.

நம் சமூகத்தின் இன்றைய இறுக்கமான இயந்திரமான வாழ் நிலையை மாற்ற ஆடல், பாடல், வரைதல், வெளிப்பாட்டுத் திறன்களை அழகியற் கல்வி ஊடாக இளம் சந்ததியினரிடம் எம் நாட்டின் சொந்தக் கலைகளை வளர்ப்பதோடு அழகியல் உணர்வைக் கட்டி வளர்த்தலும் அவசியம் இதனூடாக சிறந்த ஆரோக்கிய மான மாணவ சமூதாயத்தை உருவாக்க முடியும்.

> எல்லோரிடமும் எப்படி அழகியலை வளர்ப்பது என்ற வினாவே மிஞ்சி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு விடை கூறுவது கஷ்டம் தான். அழகியலை வளர்க்க – இப்படித்தான் என்ற ஒரு முறையைத் தெரிவு செய்து செயற்பட முடியாது. ஏனெனில், எம் வாழ்விய லோடு இரண்டறக் கலந்து ளது அழகியலாகும். அந்த வகையில் நாம் அழகியலை பல வழிகளிலும், வாழ்க்கை நடைமுறைகளுக்கு ஏற்ப வளர்ததுக்கொள்ள வேண்டும்.

எல்லோரிடமும் எப்படி அழகியலை வளர்ப்பது என்ற வினாவே மிஞ்சி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு விடை கூறுவது கஷ்ரம் தான். அழகியலை வளர்க்க - இப்படித்தான் என்ற ஒரு முறையைத் தெரிவு செய்து செயற்பட முடியாது. ஏனெனில், எம் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துள் அளது அழகியலாகும். அந்த வகையில் நாம் அழகியலை பல வழிகளிலும், வாழ்க்கை நடைமுறைகளுக்கு ஏற்ப வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் இன்றைய இளம் சந்ததியினர் மத்தியில் அழகியல் உணர்வை வளர்க்க அவர்களுக்கு வழிகாட்டி, ஊக்கப்படுத்த வேண் டும். மாணவர்கள் மத்தியில் அழகியலை இரசிக்கும தன்மையை வளர்த்து, வெளிப்படுத்தும் ஆற்றலை மேம்படுத்த வேண்டும்.

- **அழகியற் கல்வியை ஊட்டல்.**
- **அழகியல் சம்மந்தமான போட்டி களை நடத்துதல்.**
- **அழகியல் சார் வெளிப்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்.**

எனப் பல வழிகளிலும் அழகியலை வளர்க்க முடியும். இதனூடாக அழகியல் உணர்வை மாணவர்கள் மத்தியில் சிறப்பாக வளர்த்துக் கொள்ளவேண்டும்.

அழகியற் கல்வி வளர்ச்சியில் மிகுந்த கவனம் எடுத்து வரும் நிறுவனங்கள் வரிசையில், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனியானதொரு இடத்தை வகிக்கின்றது. அந்த வகையில் கடந்த ஆண்டு நிகழ்த்திய "அழகெழல் - 2003" முக்கிய மானதாகும் முக்கிய பல நூற்றுக் கணக்கான மாணவர்களைப் பங்குகொள்ளச் செய்து அவர்களிடையே ஓவியம், கிராமிய இசை, கிராமிய நடனம் நாடகம் போன்ற துறைகளில் போட்டிகளை நடாத்தி சிறந்த பெறுமதி மிக்க பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிய நிகழ்வானது சாதாரண ஒரு போட்டி நிகழ்வு போலத் தோன்றினாலும், உண்மையிலேயே சிறந்த கட்டுப் பாடும், ஒழுக்கமும், பண்பாட்டு விழுமியங்களும் பேணப்படும் ஒரு கல்வியிற கல்லூரியால் நடத்தப்பட்டதால் அழகியல் சார் எழுச்சியாகவே அமைந்தது. அழகெழல் நிகழ்வு தொடர்ந்து இந்த ஆண்டு "அழகெழல் - 2004" இந்த மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இதல் அதிகளவில் இளஞ் சிறார்களையே மையப்படுத்திப் போட்டிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அதாவது, சிறுவர் நாடகம் சிறுவர் கிராமியப் பாடல், கிராமிய நடனம் என்பவற்றோடு சித்திரம், தனிநடிப்பு எனப் போட்டிப் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அத்தோடு, ஆசிரியர், சமூகத்தினர் மத்தியில் வரைதல் திறனை ஊக்குவிக்கு முகமாக ஆசிரியர்களுக்கான சித்திரப் போட்டியும் நடத்தப் படுகின்றது. இதில் கடந்த ஆண்டைவிட அதிகமாகப் போட்டியாளர்கள் பங்கெடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் எம் உறவுகள் மத்தியில் எம் கலைவடிவங்கள் பேணப்படுகின்ற ஒரு விழிப்பு நிலை நிலவிவருவது யாவரும் அறிந்ததே. அதனைவிட நம் நாட்டில் மாபெரும் விழிப்புநிலை ஏற்படுத்தப்பட்டு எங்கும், எதிலும், எப்போதும், என்றும் அழகியற் கலைகள் பேணப்பட்டு வளர்க்கப் பட வேண்டும் "அழகெழல் - 2004" போட்டி நிகழ்வின் தொடர்ச்சி எம் மண்ணில் அழகு எழல் வேண்டும் அழகியல்துறைசார் நிறுவனங்கள் போட்டி மனப்பான் மையோடு அழகியற் கல்வியை ஊட்டி அழகியற்கலையை மேம் படுத்த வேண்டும். ஊடகங்கள் தொடர்ந்தும் தம்பணி செய்ய வேணடும் அழகியற்கலை வல்லுனர்களாகமாறி எம் இளம் சந்ததியினர் மத்தியில் உணர்ச்சி பூர்வமாக கற்பிக்க வேண்டும். இதனூடாக அன்பும், பண்பும், மனித நேயமும் நிறைந்த ஒரு சமுதாயத்தினை எம் மண்ணில் கட்டியெழுப்ப முடியும்.

"யாரொருவன் கலை என்ற
கொடை அற்றவனோ -அவன்
கொம்புகளும் வாலுமற்ற மிருகம்"

என்கின்றார் மேற்குலக அறிஞர் ஒருவர். எனவே, இங்கே உள்ள ஒவ்வொரு சிறுவனையும், சிறுமியையும் கலைஞனாக்குவோம்.

---

ஒரு நிமிடம் சிந்திப்போம்.

## - மனித மாண்பை சிதைக்காது வாழ்வோம் -

சமயங்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. விஞ்ஞானம் அறிவை அடிப்படையாகக் கொண்டது.

காரண காரியத் தொடர்பு கொண்டு நிரூபிக்க முடியாதவை சமய நம்பிக்கைகள். விஞ்ஞானம் காரண காரியத் தொடர்புடன் நிரூபிக்க கூடியது.

இந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட சமய வாதிகள். தங்கள் சமயத்தில் உறுதியாக இருப்பது தவறில்லை. ஏனெனில், சமயங்கள் அனைத்துமே நல்லதையே போதிக்கின்றன. அத்துடன், சமய சடங்குகள் மனிதனை ஆற்றுப் படுத்துகின்றன என்பது உண்மையானது.

சடங்குகள் மனிதரினால் உருவாக்கபபட்டவை என்றாலும், அவை பக்தி என்ற அடித்தளத்தின் மீது கட்டப் பட்டவை.

அனைத்து சமயத்தினருக்கும் சடஙகு - சம்பிரதாயங்கள் இருக்கின்றன. இவை வேறுபாடு கொண்டவையாகக் காணப்படுகின்றன. வெவ்வேறு கருத்தியலை சொல்வதாக இருக்கின்றன. எது என்னவாக இருபபினும் அந்தந்த சமயத்தினை பின்பற்றுபவருக்கு, அவர்கள் சமய சடங்குகள் மீது அதீத பற்றும் பக்தியும் இருப்பது தவிர்க்க முடியாதது. ஏனெனில்,அவர்கள் சிறுவயதில் இருந்து சமூக மயமாக் கலின் மூலம் கற்றுக் கொண்டதி னால் ஆகும்.

எனவே, மாற்றுச் சமயத்தினரை பிழையானவர்கள் என்று உரைக்க யாருக்கும் உரிமையில்லை. மாற்று சமயத்தினரின் சடங்கு - சம்பிரதாயங்களை கொச்சைப்படுத்துவது அழகல்ல.

சமய வாதிகளிடையே மோதல்களும், குழப்பங்களும் உண்டாவதற்குக் காரணம், தம் சமயம் பிழை என்ற கருத்து மேலோங்கி இருப்பது ஆகும். இதனால் மோதல்களும் - முரண்பாடுகளும் தோன்றி அழிவுகளையே கொடுக்கின்றன. இது வரலாற்று உண்மையாகும்.

பல்சமய சூழலில் வாழும் நாம் மாற்று சமயத்தினரை மதிக்க - அவர்கள் சடங்கு சம்பிராதயங்களை பேண வேண்டியது அவசியம். எம் சமயம் மீது பற்று கொள்வதற்காக, மற்றவர்களை நியாயம் தீர்க்க அவர்கள் மீது குற்றம் சுமத்த முடியாது.

சமய சடங்குகள் அனைத்தும் குறியீடு சார்ந்தவையாகவே காணப் படுகின்றன. அதாவது மெழுகுதிரி கற்பூரம் - விளக்கு - போன்ற அனைத்தும் கோவில்களிலும், வீடுகளிலும் கொழுத்துவது இயல்பானவை கொடுக்கும் உருவகத்தன்மை இவ்வுலகில் எத்தன்மை இவ்வுலகில் எம்மை உருவாக்க மற்றவர்களுக்கு ஒளி கொடுக்கும் போது, மறுவுலக வாழ்வில் முக்திப்பேறு கிடைக்கும் என்பதாகும். இதைப் போன்ற குறியீடுகள் ஏராளம் சமயங்களில் காணப் படுகின்றன.

ஆகவே, சமயங்களின் அடிப்படைப் போதனைகள், ஒன்றானவை அவை பின்பற்றப்படுகின்ற முறைகள் தான் மாறுபாடு கொண்டவை என்று சில அரசியல் வாதிகளும் வேறு சில சமயவாதிகளும் தமது சுயலாபத்திற்காக அடிப்படையில் ஒற்றுமையாக அன்பாக வாழும் மக்களிடையே பிரிவினைகளையும் - மத துவேசத்தினையும் ஏற்படுத்தி தாம் அதில் லாபம் பெறுகின்றார்கள். இதைக் குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

நாம் வாழும் சமூகத்தில் மாற்றுச் சமயத்தினரை மதித்து, சமயங்களின் அடிப்படைப் போதனையாகிய அன்பை மற்றவர்கள் மீது செலுத்தி, மதம் மீது மதங் கொண்டு மனித மாண்பை சிதைக்காது வாழ்வோம்.. சிந்திப்போம்... செயற்படுவோம்.

யாழ். ராதவல்லி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்.

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதி துணிவாரா ?

மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து அரசின் பக்கமிருந்து உறுதியானதும், நம்பிக்கையூட்டும் வகையிலானதும், தெளிவானதுமான எந்தவொரு கருத்தும் குரல் தரவல்ல தகைமை கொண்டவர்கள் எவராலும் இதுவரை வெளிவரவில்லை என்பது ஏமாற்றம் தரும் உண்மையேயாகும். கடந்த ஒரு மாதகாலமாக இவ்விடயம் தொடர்பாக, அரச அல்லது ஜனாதிபதி வட்டாரங்களில் இருந்து வெளிவரும் செய்திகள்யாவும் பொறுப்பற்ற தன்மையைக் கொண்டனவாகவும், முன்னுக்குப்பின் முரணான கருத்து நிலைப்பாடுகளை வெளிப்படுத்துபவையாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்குப் பல்வேறு காரணங்களை நாம் ஊகித்து உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருப்பதும், இந்த ஊகங்கள் பெருமளவுக்கு சரியானவையாக இருப்பதும் இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமாகவும் உள்ளது.

இந்த அரசு, ஆட்சிக்கு வரமுன்னர் அதன் தேர்தல் பிரசாரத்தின் மூலக் கருத்தானது கடந்த அரசின் சமாதான முயற்சிகளை முற்றும் முழுதாக நிராகரிப்பதாக இருந்ததுடன் அது தொடர்பான சர்வதேச அணுகுமுறையும், குறிப்பாக நோர்வே அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்த்து விமர்சிப்பதாகவும் அமைந்திருந்தமையை நாம் இந்தச் சமயத்தில் நினைவூட்டுவது அவசியமாகும்.

எனவே, இன்றைய அரசை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகியவை உட்பட அனைத்துத் தரப்பினரதும் அரசியற் கோட்பாடுகள் அனைத்தும் சிங்கள, பௌத்த பேரினவாத சிந்தனைகளின் அடிப்படையில் உருவானவை என்பதால் இனப்பிரச்சினை தொடர்பான அவர்களின் கருத்து நிலைப்பாடுகள் எல்லாம் அதற்குச் சார்பானதாக இருக்கும் என்பதைச் சொல்லி விபரிக்க வேண்டிய அவசியமே கிடையாது.

அதுவும் இந்தக் கூட்டுக் கட்சிகளிடையேயான புரிந்துணர்வு ஒருமைப்பாட்டில், தமிழ் மக்களுக்கு எதிரான- அவர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான - அதனை முன்னெடுத்துச் செல்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொள்கைகளே முக்கியமான அம்சமாக - இணைப்புக் கருத்து நிலைப்பாடாக உள்ளதைக் கவனத்தில்கொள்வது அவசியமாகும்.

இதற்கு அப்பால் இவர்கள் கூட்டாக இணைந்து செயற்படுவதற்கு எந்தவிதமான அரசியல் சித்தாந்தங்களின் அடிப்படையிலான கொள்கை உடன்பாடுகளுடன் கூடிய, தேசிய நலனில் அக்கறை கொண்ட இலட்சிய இலக்குகள் எதுவுமே இவர்களுக்குக கிடையாது.

முரண்பாட்டு மூட்டைகளின் தொகுதிக் கூட்டே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகும். எனவே அவர்களால் தேசிய இனவிவகாரம் தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த செயற்பாடுகளில் ஒருமித்த கருத்துடன் கூடிய செயற்திட்டம் ஒன்றிற்கு உடன்படும் சாத்தியம் என்பது சாத்தியமற்ற விடயமாகவே உள்ளது.

அதனால் தான் எதிர்காலச் சமாதான முன்னெடுப்புக்கள் யாவும் சந்தேகத்திற்குரியவையாக உள்ளன எனலாம்.

- ஜனாதிபதி ஒன்று சொன்னால், விமல் வீரவன்ச வேறொன்றைக் கூறுகிறார்.

- மஹிந்த ராஜபக்ஷஒரு கருத்தைக் கூறினால் ரில்வின் சில்வா அதனை மறுதலிக்கிறார்.

- ஜனாதிபதி நோர்வேக்கு சமாதானத்தை முன்னெடுக்க அழைப்புவிடும் அதே சமயம், போர்நிறுத்த உடன்பாட்டுக்கு விரோதமாக ஆயுதம் மற்றும் இராணுவத் தளபாடக் கொள்வனவுக்காக தனது படைத்தரப்பு அதிகாரிகளை அமெரிக்கா உட்பட்ட பல நாடுகளுக்கும் அனுப்புகிறார்.

- ஒரு நாளின் காலையில் இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்து பேசத்தயார் என்று ஜனாதிபதி கூற, மாலை யில் தாம் அதனை முற்றாக எதிர்ப்பதாக ஜே.வி.பி சூளுரைக்கிறது.

- ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினால் ஜே.வி.பியை சமாதான முயற்சிகள் தொடர்பான ஒரு நிலைப்பாட்டுக்கு கொண்டுவர முடியாமல் இருக்கிறது.

- அதிகாரப் பலமிக்க ஜனாதிபதியின் ஒரு ஆட்சியைக் கலைத்து அதற்கு ஏதோ ஒரு காரணத்தைக் கூறி அது நியாயமற்றதாக இருந்தாலும் அதனை தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி நியாயப்படுத்தும் ஆற்றலை மீறியதான, மிக மோசமானதும், அவமானகரமானதுமான பலவீனமே இதுதான்.

-இதுவே இன்றை சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தி வரும் அரசியல் காரணியுமாகும்.

- தனது அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வேண்டிய அரசினைச் சார்ந்தோரின் அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் பயந்து தேசிய நலன் குறித்த அத்தியாவசிய விடயங்களில் கூட தீர்க்கமானதும், நியாயமானதுமான ஒரு முடிவை எடுக்கும் திராணியற்றவராக தன்னை இனம் காட்டி நிற்கும் ஜனாதிபதியால் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை சமாதான ரீதியில் ஏற்படுத்த, அவசியமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க உறுதியுடன் செயற்படும் வகையில் நகர்வுகளை துணிச்சலுடன் முன்னெடுக்க முடியும் என நம்புவது கடினமே.

இந்த நிலையில், இனிமேலும் சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் குறித்து ஜனாதிபதியோ, அரச தரப்பினரோ பேசுவதாயின் பேரினவாதச் சக்திகளைப் புறந்தள்ளி அவர்களின் வாயை அடக்கிவிட்டு பேச்சுவார்த்தைகள் குறித்த ஒரு தெளிவான உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படையாகப் பிரகடனம் செய்வது அவசியமாகும். அதற்கு அவர் துணிவு கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதனைவிடுத்து இரட்டை மனதுடன், இரட்டை வேடமிட்டபடி சமாதானம் குறித்துப் பேசுவதற்கு முன்வர நினைப்பது தமிழர் தரப்பையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி 'பேய்க்காட்டும்' மூலோபாயமாகவே இருக்கும்.

-அது இலங்கையில் மற்றொரு வரலாற்று அவலம் ஏற்படவே வழிவகுக்கும்.

-அதற்கும் இதே ஜனாதிபதியும் அவரின் தோழர்களும் தான் பொறுப்பேற்க வேண்டியுமிருக்கும்.

## நாடும் நடப்பும்




# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

உள்ளூராட்சிவார நிகழ்வுகளை முன்னிட்டு யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குகிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் - கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. கீழ்ப்பிரிவுப் போட்டிகளில்- 7ஆம், 8 ஆம், 9 ஆம் தரங்களில் கற்கும் மாணவர்களும் மேற்பிரிவில் - 10 ஆம் , 11 ஆம், 12 ஆம் தரங்களில் கற்கும் மாணவர்களும் பங்கேற்க முடியும்.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் - கருவறையில் இருந்து கல்லறை வரையிலான உள்ளூராட்சி மன்றங்களின் சேவை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பரிணாம விடயம் சார்ந்த தலைப்பிலும்,

மேற்பிரிவு மாணவர்கள் - உள்ளூராட்சி மன்றங்களின் நிதி முகாமைத்துவம், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏனைய திணைக்களங்களுக்கும் இடையிலான வேறுபாடு மற்றும் யாழ். மாநகராட்சி மன்றத்தின் தோற்றமும், வளர்ச்சியும் எனும் விடயம் சார்ந்த தலைப்புக்களில் குலுக்கல் முறையிற் தெரிவுசெய்யப்படும் தலைப்பில் 4 முதல் 7 நிமிடங்களுக்குள் பேசுதல் வேண்டும்.

கட்டுரைப் போட்டியில் பங்குபற்றும் கீழ்ப்பிரிவு மாணவர்கள் - உள்ளூராட்சி மன்றங்களின் பரிணாமம், கருவறையில் இருந்து கல்லறை வரையிலான உள்ளூராட்சி மன்றங்களின் சேவை மற்றும் உள்ளூராட்சி சேவை வளம்பெற மக்களின் பங்களிப்பு என்பதை அடிப்படையில் கொண்ட தலைப்புக்களின் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் தலைப்புக்களில் 45 நிமிடங்களுக்குள் 250 சொற்களுக்குக் குறையாமலும்,

மேற்பிரிவினர் - உள்ளூராட்சி மன்றங்களின் சேவை மகத்துவம், இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் தோற்றமும் பரிணாமமும் மற்றும் சமூக அபிவிருத்தியில் உள்ளூராட்சி மன்றங்களினதும் சனசமூக நிலையங்களினது பங்கு எனும் தலைப்பில் 1 மணித்தியாலத்திற்குள் 350 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுதல்வேண்டும்.

கட்டுரைப்போட்டி ஓகஸ்ட் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், பேச்சுப் போட்டிகள் ஓகஸ்ட் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

பங்குபெற விரும்பும் மாணவர்கள் தத்தமது அதிபர்கள் ஊடாக எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# தடுப்பணை, பொதுக் கட்டடம் மக்கள் பாவனைக்கு விடப்பட்டது

ஊர்காவற்றுறை புளியங்கூடல் உவர்நீர்த் தடுப்பணை மற்றும் புளியங்கூடல் பொதுக் கட்டடம் என்பன, நேற்று முன்தினம் முதல் யாழ். அரச அதிபரால் மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

புளியங்கூடல் விவசாயிகள் அமைப்பிடமும், சின்னமடு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்திடமும் இவை பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நியாப் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த உவர்நீர்த் தடுப்பணை மூலம் விவசாயிகள் நன்மை அடைய முடியுமெனவும், இதுவரை கட்டடம் ஏதுமின்றி சிரமங்களை அனுபவித்து வந்த புளியங்கூடல் மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் தமது செயற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்ளக் கூடிய வகையில் பொதுக் கட்டடம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் நியாப் திட்ட மாவட்டப் பணிப்பாளர் பா.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அந்தப் பிரதேச மக்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அதிகாரிகள், சேவாலங்கா நிறுவன அதிகாரிகள், நியாப் திட்ட அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ப)

# நாடு திரும்பிய குடும்பங்கள் நெடுந்தீவில் மீள் குடியமர்வு

நெடுந்தீவில் இருந்து இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற 07 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் நேற்றுமுன் தினம் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவியுடன் நெடுந்தீவில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கொழும்புக்கு விமானம் மூலம் அழைத்து வரப்பட்ட இவர்களுக்கு, விமான நிலையத்தில் வைத்து யு.என்.எச். சி.ஆர் நிறுவனத்தால், தலா ஒரு குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் உதவித் தொகை வழங்கி, உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர். கொழும்பில இருந்து இவர்கள் தங்கள் உறவினர்களுடன் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தியாவில் இருந்து விமானம் மூலம் கொழும்புக்கு வந்து, சனிக்கிழமை யாழ்.நகரிலே தங்கி, நின்று நேற்றுமுன்தினம் இவர்கள் நெடுந்தீவை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

### வெடிபொருள் அகற்றப்பட்ட

# மறவன்புலோவின் ஒரு பகுதி மக்களிடம் கையளிக்கப்படும்

வெடிபொருள் அகற்றப்பட்ட மறவன்புலோவின் ஒரு பகுதி பொதுமக்களின் பாவனைக்காககையளிக்கப்படவிருப்பதாக யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டலுவலகம் தெரிவித்துள்ளது.

தென்மராட்சியின் - மறவன்புலோ, தனங்கிளப்பு முதலான பகுதிகளில் வெடிபொருள்களை அகற்றிவரும் இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினராலேயே மறவன்புலோவில் 15 லட்சம் சதுரமீற்றர் பரப்பளவுள்ள பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி - விரைவில் அப்பகுதி உதவி அரச அதிபரினூடாக பொதுமக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளதாகவும், தொடர்ந்து வெடிபொருட்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர், அந்தப் பகுதியில் சேவையில் ஈடுபட்டுவருகின்றமையால் இவர்களால், மேலும் பலபகுதிகள் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்தவாரம் வரணி, நாவற்காடுப் பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றப்பட்ட ஆயிரத்து 326 சதுரமீற்றர் பரப்பளவு பிரதேசமும், நுணாவில் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட ஆயிரத்து 383 சதுரமீற்றர் பரப்பளவுடைய நிலப்பகுதியும் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இவ்விரு பகுதிகளிலிருந்தும் ஹலோரஸ்ட் வெடிபொருள அகற்றும் பிரிவினரால் - 276 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக யாழ். செயலக மிதிவெடி செயற்பாட்டலுவலக அதிகாரி வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இதேவேளை, மல்லாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் பகுதிவரை உள்ள வெடிபொருள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதியில் ரெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவினர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ப)

சர்வதேச அரசியல் பகுதி - 2 - ராகினி

# கனேடிய தேர்தல் முடிவுகளும் அங்கு வாழும் தமிழர்களின் எண்ணமும்...

கனேடியத் தேர்தலில் ஒரு கட்சி வெற்றி பெறுவதற்கு ஒன்ரோறியோ மாகாணம் முக்கியமானதாகும் நாடாளு மன்றத்தில் உள்ள மொத்த ஆசனங் களுக்கான மூன்றில் ஒரு பங்கு வரை யிலான உறுப்பினர்கள் ஒன்ரோறியோ மாகாணத்தில் இருந்தே தெரிவு செய் யப்படுகின்றனர். கடந்த தேர்தல் களில் ஒன்ரோறியோ மாகாணத்தில்



103 தொகுதிகளும், இம்முறை பிர தேச எல்லைகளில் மீள்வரைவின் பின்னர் 106 தொகுதிகளும் வெற்றி பெறுவதற்காக இருந்தன. .

இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ரோறியோ மாகாணம் இதுவரை காலமும் லிபரல் கட்சியின் கோட்டை யாக கருதப்பட்டது. முன்னைய தேர் தல்களில் ஒன்ரோறியோ மாகாணத் தின் அநேகமான ஆசனங்களை லிப ரல் கட்சியே கைப்பற்றி வந்திருககின றது. இம்முறை லிபரல் கட்சி வெற்றி பெறுவதற்கு ஒன்ராறியோவில் அவர் கள் பெறும் ஆசனங்களில் எண் ணிக்கை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இதே ஒன்ரோறியோ மாகாணத் திலேயே தமிழர்கள் உட்பட ஆசிய நாட்டவர்கள் பலரும் வாழ்ந்து வரு கின்றனர். இம்முறை ஒன்ரோறியோ மாகாணத்தில் ஈழத்தமிழர் ஒருவர் உட்பட பல்வேறு கட்சிகள் சார்பில் பல ஆசிய பிரதிநிதிகள் போட்டியிட் டமை பலரது கவனத்தையும் ஈர்த் திருந்தது.

1983ம் ஆண்டிலிருந்து தமிழர் கள் இலங்கைத்தீவில் இருந்து பெரு மளவில் புலம்பெயர ஆரம்பித்துவிட் டனர். உளநாட்டு யுத்தம் உச்சக் கட்டம் அடையவே 1990 ஆம் ஆண்டு களில் ஈழத் தமிழர்கள் அதிகளவில் புலம் பெயரவேண்டிய சூழ்நிலை தோன்றியது. இவ்வாறு அகதிகளாக குடிபெயர ஆரம்பித்த தமிழர்கள் கனடாவைத் தமது இரண்டாவது தாய் நாடாகத் தெரிவு செய்தனர். அகதிகளாக குடிபெயர்ந்த தமிழர் களில் அனேகமானோர் கனடாவில் வாழ்வதற்கு தெரிவுசெய்த இருநக ரங்கள ரொறன்ரோ மற்றும் மொன் றியல்.

, ரொறன்ரோ, ஒன்ரோறியோ மாகாணததின் மிக முக்கியமான நகரமாகும். அதிகளவில் வெளி நாட்டவர் வாழும் நகரங்களில் உலகளாவிய ரீதியில் ரொறன்ரோ முதலிடம் பெறுகின்றது. மொன் றியல், கியுபெக் மாகாணத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றா கும். ரொறன்ரோவைப் போலவே அதிகளவு வெளிநாட்டவர்கள் மொன்றியலிலும் வசிக்கின்றார் கள்.

குறிப்பாக ஒன்ரோறியோ மாகாணத்தில் பல்கலைக்கழக புகுமுகமாணவர்களுக்கு தமிழ் ஒரு பாடத்தெரிவாக அமைந் துள்ளமை ஒன்ரோறியோவின் பல்கலாசாரத் தன்மையை உல கிற்கு எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு வெளிநாட்டவர்களின் ஆதிக்கம் அதிகம் உள்ள மொன்றியல் மற்றும் ரொறன்ரோ நகரங்களில் ஆண்டாண்டு காலமாக லிபரல் கட்சி பலம் பெற்றிருந்தது. இதற்கு பல காரணங்கள் சுட்டிக்காட்



டப்பட்டாலும், லிபரல் கட்சி புதிய குடிவரவாளர்கள் விடயத்தில் மேற் கொணடு வரவேற்கத்தக்க பல நட வடிக்கைகள் அதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆனாலும், முன்னெப்போதும் இல லாத அளவிற்கு இம்முறை ஒன்ராறி யோவில் பத்து மாதகாலத்தில் மூன்று தேர்தல்கள் நடைபெற்றன. ஒன்ரோறி யோவின் மாகாணசபைத் தேர்தல், ரொறன்ரோ மற்றும் இதர பிரதேச சபைத் தேர்தல் மற்றும் கனடா ரீதி யிலான பொதுத் தேர்தல் என ஒன் ரோறியோ தேர்தல் திருவிழா கொண டாடியது. .

இவ்வாறான தேர்தல்களில் இம் முறை ஆசிய நாட்டவர்கள் வாக் காளர்களாக மாத்திரம் இல்லாமல் வேட்பாளர்களாகவும் பங்கெடுத் தமை கனடாவிற்கே கிடைத்த சிறப் பாக பலராலும் பாராட்டப்பட்டது. ஒன்ரோறியோவின் மாகாணச் சபைத தேர்தலில் லிபரல் கட்சி மாபெரும் வெற்றிபெற்றபோது ஆசியர்கள் பலரும் மாகாணசபைப் பிரதிநிதி களாக தெரிவுசெய்யப்பட்டனர். இவர் களின் இந்திய நாட்டவர் ஒன்ரோறி யோவின் போக்குவரத்துத் துறை அமைச்சராக தற்போது பதவி வகிக் கின்றார். இவ்வாறான பல ஆசியப் பிரதிநிதிகளின் வெற்றிக்கு தமிழர் கள் பலரும் கடுமையாக உழைத் திருந்தமை பல சமூகத்தினராலும் கருத்தில் கொள்ளப்பட்டது.

ரொறன்ரோவில் மாநகரசபைத் தேர்தல்கள் நடைபெற்றபோது. ரொறன் ரோவிற்கு வடக்கே அமைந்துள்ள யோர்க் பிரதேசத்திலும் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் மொத் தம் ஆறு ஈழத்தமிழர்கள் வேட் பாளர்களாகப் போட்டியிட்டிருந்தனர். இது கனேடியத் தமிழ் சமுதாயததின ருக்கு ஒரு புதிய அனுபவமாகவும் அமைந்திருந்தது. இவ்வாறு தேர் தலில் போட்டியிட்டவர்கள கனடாவி லேயே ஆரம்பக்கல்வி முதல் கல்வி கற்ற மாணவர்கள் தொடக் கம். தமிழ் வானொலி நிலையத்தின் அதிபர் ஒருவர் என அனுபவம் கொணடவர்களாக இருந்தார்கள். இத் தேர்தலில் எந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் யோர்க் பிரதேசசபைக் குத் தெரிவாகாத போதிலும் கனடாவில் தமிழர்களின் அரசி யல் எதிர்காலத்துக்கு இது ஒரு அடிக் கல்லாக நோக்கப்பட்டது.




அந்த வகையிலேயே இம்முறை பொதுத் தேர்தலின்போது புதிய ஜனநாயகக் கட்சிக்காக மேற்கு டொன வலித் தொகுதியில் போட்டியிட்ட ஈழத் தமிழரான டேவிட் தோமஸ் கனடாவில் தேசிய ரீதியில் தேர் தலில் போட்டியிட்ட முதலாவது தமி ழர் என்ற பெருமையைப் பெற்றிருந் தார். அவர் மக்கள் ஆதரவில் மூன் றாவது இடத்தை மாத்திரமே வாக் குக்களின் அடிப்படையில் பெறமுடிந் தது. இருந்தபோதிலும் தமிழ் மக் களின் அரசியல் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புக்களை இது அதிகரித் துச் சென்றது.

இதே ஒன்ரோறியோ மாகாணத் தில் பிச்சஸ்-ஈஸ்யோர்க் தேர்தல் பிர தேசத் தொகுதியில் லிபரல் கட்சி யின் வேட்பாளர் திருமதி. மரியா மின்னா. 1993ஆம் ஆண்டு முதல் தோ தல் பிரதேசத்தை இவர் பிரதிநிதித் துவப்படுத்துகின்றார். இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கனே டியப் நாடாளுமன்றத்தில் இயங்கி வரும் இலங்கை - கனடா நாடாளு மன்ற நட்புறவுச் சபையின் தற் போதைய கனேடியத் தலைவர் இவரே. இவருக்கும் இலங்கைக்கும் இருக்கும் தொடர்பு இதுமாத்திர மல்ல. திருமதி. மரியா மின்னாவின் பிச்சஸ்-ஈஸ்யோர்க் அலுவலகத்தின் தலைவர் கணேசன் சுகுமார். இவர் ஒரு ஈழத்தமிழர். தாயகத்தில் சண்டி லிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கனடாவில் இயக்கும் நிதி நிறுவனம் ஒன்றின் அதிபராவார். இவ்வாறு கனேடிய அரசியலில் தமிழர்களின் பங்கேற்பு நாளுக்கு நாள் அதிகரித்துவரு கின்றது.

இம்முறை கனடாவில் நடைபெற்ற தேர்தலில் லிபரல் கட்சி மொத்தம் 135 ஆசனங்களையும். கனேடிய பழமைவாதக் கட்சி 99 ஆசனங்களை யும், கியூபெக் கட்சி 54 ஆசனங் களையும், புதிய மக்களாட்சிக் கட்சி 19 ஆசனங்களையும் பெற சுயேடசை உறுப்பினர் ஒருவரும் நாடாளுமன் றத்திற்கு தெரிவாகியுள்ளார்.

லிபரல் கட்சி வெற்றிபெற்ற மொத் தம் 135 ஆசனங்களிலும் 75 ஆச னங்களை ஒன்ரோறியோ மாகாணத் திலேயே பெற்றிருந்தது. கனேடிய பழமைவாதக் கட்சி 24 ஆசனங் களையும், புதிய மக்களாட்சிக் கட்சி 7 ஆசனங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

மொத்தமாக லிபரல் கட்சி வெற்றி ஆசனங்களின் எண்ணிக்கையில் 55 சதவீதமான ஆசனங்களை ஒன்ரோறி யோவிலேயே பெற்றிருந்தது. ஒன்ரோறி யோவில் வெற்றிபெற்ற ஆசனங் களே மீண்டும் லிபரல் கட்சிக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியது.

168 ஆசனங்களுடனும் பெரும் பான்மைப் பலத்துடனும் தேர்தலை எதிர்கொண்ட லிபரல் கட்சி, தனது பெரும்பான்மையை இழந்ததுடன் 135 ஆசனங்களை மாத்திரமே இம் முறை பெற்றிருந்தாலும், லிபரல் கட்சி இத்தேர்தலில் வெற்றிபெற்றது தமிழர்களைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியான விடயமாகவே கருதப் படவேண்டும். குறிப்பாக பெரும் பான்மை ஆட்சியைப் பெறாமல் லிபரல் கட்சி பெற்ற ஆட்சிக்கான ஆணையே புலம்பெயர்ந்த தமிழர் களால் பெறமுடிந்த பெரிய வெற்றி யாக கணக்கிடப்படவேண்டியது.

லிபரல் கட்சி மீது தமிழ் மக் களினால் சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவற் றில் இலங்கையின் சமாதானப் பேச் சுக்களில் கனேடிய அரசு தகுந்த பங்குகளிப்பை வழங்கவில்லை என் பதே முக்கியமானதாகும்.

இந்தக் குற்றச்சாட்டில் உள்ள உண்மைகள் எவை? கனேடிய அர சின் உண்மையான நிலைப்பாடு என்ன? தேர்தல் முடிவுகளில் கவ னிக்கப்படவேண்டியவை எவை? மூன்றாம் பாகத்தில் ஆராய்வோம்.

அக்கரையிலிருந்து ஒரு மதிப்பீடு பகுதி - I - சு. துரை

# தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெறுதல்; தொடர்பான சில எண்ணப் பதிவுகள்

1918ஆம் ஆண்டு முதல் முன் வைக்கப்பட்ட தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற வேண்டும் என்ற கோரிக்கை 2004இல் நிறைவேறும் தருணத்தில் இது தொடர்பாகச் சிலவற்றைப் பொறுப்புடன் விவா திப்பது தமிழர்கள் அனைவரது கடமை.

1946 இல் நாகபுரியில் நடை பெற்ற அகில இந்தியக் கீழைத் தேய மொழியியல் மாநாட்டில் திரா விட மொழிப் பகுதிக்குத் தலைமை தாங்கிப் பேருரை ஆற்றிய பேரா சிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை திராவிட மொழிகளுக்கு முதன் முறையாக இப்பொழுதுதான் தனி யான ஒரு துறை உருவாக்கப்பட் டுள்ளது என்று மகிழ்ச்சி தெரி வித்து, திராவிட மொழிகளிலேயே மூலத்தன்மையைத் தன்னுள் பெரு மளவு பெற்றுள்ள தமிழ் மொழி யில் நாம் செய்ய வேண்டிய பல வேலைகளை 36 பக்கங்களில் சுட்டிக்காட்டி எழுதினார்.

அவர் சுட்டிக்காட்டிய பல பணிகளில் சுமார் 75% இன்னும் செய்யப்படாமலேயே உள்ள நேரத்தில் தமிழ் செம்மொழி என் னும் அறிவிப்பை எதிர் நோக்கு கின்றோம். திராவிட மொழிகளில் முதன்மையானதாக உள்ள தமி ழின் தகவமைப்பிற்குத் தேவை யான பணிகளை நாம் நிறைவேற் றாமல்விட்டது இன்று திராவிட மொழி பேசும் மற்றவர்கள் தமிழை முழுமையாக அங்கீகரிக்க இயலா மல் செய்துவிட்டது.

இத்தகையதொரு நிலை செம் மொழியாகும் தமிழுக்கு நிகழக் கூடாது. அதற்கு நாம் உடனடியா கச் செய்ய வேண்டிய பணிகள் பலவற்றுள் அடிப்படையானவை என்று எங்களுக்குத் தோன்றிய சிலவற்றைச் சுட்டிக்காட்டிச் செயற் பாட்டுக்குத் தூண்டுவது பொருத்த மானது எனக் கருதுகிறோம்.

செம்மொழித் தகுதிபெற்ற மொழிகளான கிரேக்கம், இலத் தீன், சீனம், அராபி முதலிய மொழி களின் தகுதிக்கு ஆதாரமான நூல்கள் பிறமொழிகளில் வந்துள்ள தாக அறிகிறோம். குறிப்பாக சமஸ் கிருதத்தில் 19ஆம் நூற் றாண்டிலேயே வேதங்கள், காவி யங்கள், இலக்கண நூல்கள் முத லியவற்றின் செம்பதிப்புகளும் வடமொழி இலக்கண இலக்கிய வரலாறுகள், தர்ம சாத்திரத்தின் வரலாறுகள் போன்ற ஏராளமான கருவி நூல்கள் மேநாட்டார் களாலேயே எழுதப்பட்டதன் விளை வாக மாக்ஸ் முல்லர் போன்ற ஜேர்மன் நாட்டு அறிஞர்கள் இந்தியா வராமலேயே வேத விற்பன்னர்களாக - வட மொழிப் பேரறிஞர்களாக ஆகும் வாய்ப்பு ஏற்பட்டது. இத்தகைய நிலை தமிழுக்கு அமைய மேற் குறித்தது போன்ற அடிப்படைக் கருவி நூல்கள் உருவாக வேண் டும்.

செம்மொழித் தகுதி தமிழுக்கு உண்டு என்பதை மெய்ப்பிக்கக் கூடிய, அனைவராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய பழந்தமிழ் நூல் களின் செம்பதிப்புகள் உடனடியா கத் தகுதிவாய்ந்த அறிஞர் குழுக் களைக் கொண்டு வெளியிடப்பட வேண்டும். உ. வே. சா. பதிப்புகள் வந்த பின்பும் பேராசிரியர் வையா புரிப்பிள்ளை, ஆராய்ச்சிக் குறிப்பு களுடன் முன்னுரை, உரை, செய் யுள் முதற்குறிப்பகராதி, சொல்ல கராதி, பொருளகராதி முதலியவற் றுடன் கூடிய சிலப்பதிகாரப் பதிப்பு



வெளிவர வேண்டும் என்கிறார்.

உ. வே. சா. பதிப்பிற்குப் பின்னும் சிலம்பிற்கு ஒரு பதிப்பு வேண்டும் என்று பேராசிரியர் சுட் டும்போது செம்மொழித் தகுதிக்கு ஆதாரமான தொல்காப்பியம் நம்முடைய நினைவுக்கு வருகிறது. இன்றுவரை தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சி முன்னுரை, பாடவேறு பாட்டுக் குறிப்புகள், உரையாசிரியர் களின் முரண்கள், சொல்லகராதி, பொருளகராதி, மேற்கோள் விளக்க அகராதி, விளங்கா மேற்கோள் அக ராதி என்று பன்முகத் தன்மை உள்ள ஒரு பதிப்பேனும் வெளிவர வில்லை. இத்தருணத்தில் இந்தப் பணி உடனே மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய ஆராய்ச் சிப் பதிப்பின் மொழி பெயர்ப்பும் உடனடியாக வெளியிடப்பட வேண் டும். இத்தகைய பதிப்பின் கூடு தல் அம்சமாகத் தொல்காப்பிய இலக்கணத்திற்கும் வடமொழி இலக்கணத்திற்குமான ஒப்பீட்டு ஆய்வுகள் பிற திராவிட மொழி களின் இலக்கணத்திற்கும் தொல் காப்பியத்திற்குமான ஒப்பீடுகள், நவீனமொழியியலின் பார்வையில் தொல்காப்பிய ஆய்வுகள் உடனடி யாக மேற்கொள்ளப்பட வேண் டும்.

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற வற்றின் பழைய உரையுடன் கூடிய ஆய்வுப் பதிப்புகள், எல்லோரா லும் ஒப்பக்கூடிய அவற்றுக்கான மொழிபெயர்ப்புகள் போன்றவை உடனடியாகச் செய்யப்பட வேண் டும்.

நவீன காலத்திற்கு ஏற்பான நுண்மையும் விரிவும் பொருந் திய, அறிவியல் அடிப்படையி லான, உலகம் முழுமையும் உள்ள வர்களின் ஏற்பையும் நம்பகத்தன் மையையும் பெறுகின்ற தமிழ் இலக்கண வரலாறு, இலக்கிய வர லாறு, கலை வரலாறு போன்றவை எழுதப்பட வேண்டும்.

உலகின் பிறமொழியினர் தமிழை எளிமையாக நுட்பத்துடன் கற்ப தற்கு வாய்ப்பாக அமையும் பல் வேறு வகையிலான அகராதிகள், சொற்களஞ்சியங்கள் உருவாக் கும் பணி தொடங்கப்பட வேண் டும்.ஜி. யு. போப் போன்ற பன் மொழி அறிஞர்களால் வியந்து பார்க்கப்பட்ட சமயம் சார்ந்த பௌத்தம், சைவம், வைணவம் இலக்கியத் தொகுப்புகளைத் தன் னிடம் கொண்ட மொழிதமிழ்.

அச்சமய இலக்கியங்கள் மத வியல் கண்ணோட்டம் இன்றி ஒப்பிலக்கியக் கண்ணோட்டத்தில் நவீன கால ஆய்வுகளுடன் கூடிய பதிப்புகள் வெளிவர வேண்டும். சான்றாக, மணிமேகலை போன்ற காவியம் இன்றைய பௌத்த அறி வின் வெளிச்சத்தில் ஒப்பிடப்பட்டு ஆய்வுக் குறிப்புகளுடன் வெளி வர வேண்டும். தமிழ்நாட்டில் ஏற் கனவே தொகுக்கப்பட்டுள்ள ஆயி ரக்கணக்கான கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவை துறை போகிய அறிஞர்களின் முறை யான ஆய்வுக் குறிப்புகளுடன் அறிவியல் அடிப்படையிலான பதிப்பு முறையில் வாசகர்கள் அனை வருக்கும் எளிதில் கிடைக்கும்படி வெளியிடப்பட வேண்டும். இதே போல இன்னும் அச்சுவடிவம் பெறாமல் பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகள் அனைத்தும் உட னடியாக நூல்வடிவில் வெளியிடப் பட வேண்டும்.

(தொடரும்)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



பிரெஞ் கயானாவில் உள்ள கொரு ஏவுதளத்திலிருந்து ஐரோப்பாவின் ஏரியன் ரொக்கட், உலகின் மிகப்பெரிய 'அனிக்' என்ற 6 தொன் எடை கொண்ட செயற்கைக்கோளைச் சுமந்துகொண்டு நேற்றுமுன்தினம் இரவு விண்ணில் சீறிப்பாயும் காட்சி.

# எரிபொருள் வண்டியில் சென்று பாக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல் ௯ பேர் பலி; ௬௦ பேருக்குமேல் காயம்!

பாக்தாத்தின் தென்மேற்குப் பகுதியில் எரிபொருள் நிரப்பிய வாகனத்திற்சென்ற தற்கொலைப் போராளி நடத்திய தாக்குதலில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டும் 60 பேருக்கு மேல் படுகாயமடைந்துமுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சைடியா பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்றது.

'நேற்றுக்காலை நாம் அனைவரும் எமது கடமையை மேற்கொள்ளும் வகையில் வரிசையாக நின்றோம். எமது அதிகாரி எமக்குரிய கடமைகளை விளக்கித் தந்து கொண்டிருந்தார். அந்தவேளையிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றது. இந்தத் தாக்குதல் நடைபெற்றவேளை பெருமளவு பொலிஸார் அங்கு நின்றனரென' இந்தத் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சலா அபீட் அலி தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பிய வாகனத்தில் வந்தவர் நடத்திய தாக்குதலில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டு 60 பேர் காயமடைந்ததாக ஈராக்கிய சுகாதார அமைச்சின் அதிகாரி சாட் அல் - அமிலி தெரிவித்தார்.

தொழிற்துறை நகரான இங்கு தற்கொலையாளி நின்றதாகவும், பின்னர் அவர் எரிபொருள் நிரப்பிய வாகனத்தை இயக்கி, பொலிஸ் நிலையத்தை நோக்கி வேகமாக ஓட்டிச்சென்றதாகவும் அருகிலிருந்த, வாகனத் திருத்துமிடத்தில் நின்ற ஒருவர் தெரிவித்தார். தற்கொலையாளி இளைஞராகவும் சிறியளவில் தாடி வைத்திருந்ததாகவும் மற்றுமொருவர் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சின் முககிய அதிகாரி எஸாம் அல் டிஜாலி மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் நேற்றுமுன்தினம் மாலை பாக்தாத்தி



லுள்ள அவரது வீட்டில் வைத்து நான்கு ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. சதாம் ஆதரவாளர்களாலேயே இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஈராக்கிய பாதுகாப்பமைச்சின் ஆலோசகர் மிஷெல் அல் சராப் தெரிவித்தார்.

பகுபா நகரிலுள்ள இராணுவ முகாமிற்கருகில் இடம்பெற்ற மற்றொரு குண்டு வெடிப்பில் இரண்டு ஆடுமேய்க்கும் இளைஞர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை, நேற்றுக் காலை துர்க்மெனிஸ்தான் நாட்டு ஒளிபரப்பாளரும் அவரது குழுவினரும் மொசூல் நகரில் காரில் பயணம் செய்தவேளை அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒளிபரப்பாளர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

## தனிமையில் தவித்த நோயாளி



ஜேர்மனியில் உள்ள பெர்லின் நகரில் அக்குபஞ்சர் டொக்டர் ஒருவர் இருந்தார். இவரிடம் 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு டொக்டர் ஊசிகளை உடலில் குத்தி சிகிச்சை அளித்தார். பின்னர் சிறிதுநேரம் அப்படியே நிற்குமாறு கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டார். ஆனால், நீண்ட நேரமாகியும் அவர் திரும்பிவராததால் வலி தாங்காமல் அந்த நோயாளி தவித்தார். பின்னர் பொறுமை இழந்த அவர், அங்கிருந்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.

பொலிஸாரும் விரைந்துசென்று அந்தப்பெண் நோயாளியை மீட்டனர். விசாரணையில் டொக்டர் ஞாபக மறதியில் ஆஸ்பத்திரிக் கதவைப் பூட்டிவிட்டுச் சென்றது பின்னர் தெரியவந்தது.

## மிகப்பெரிய செயற்கைக்கோள்

விண்வெளிக்கு ரொக்கட்டுக்களை அனுப்புவதில் அமெரிக்கா, ரஷ்யா நாடுகளைபபோல பிரான்ஸூம் தொழில்நுட்பத்தில் சிறந்துவிளங்குகிறது. இங்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தங்கள நாட்டில் தயாரிக்கப்பட்ட செயற்கைக் கோள்களை இங்கு கொண்டுவந்து பிரான்ஸ் நாட்டு ரொக்கட்டுக்கள்மூலம் விண்வெளியில் செலுத்தப்படுகிறது.

தற்போது கனடாவைச் சேர்ந்த மிகப்பெரிய தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் ஒன்று கடல் கடந்து பரான்ஸ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தச் செயற்கைக்கோள் ஏரியன் - 5 என்ற ரொக்கட்மூலம் விண்வெளிக்குச் செலுத்தப்பட்டது.

இநதச் செயற்கைக்கோள் 6 தொன் எடையுடையது. உலகிலேயே இதுவரை தயாரிக்கப்பட்ட செயற்கைக் கோள்களில் இதுதான் மிகப்பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.



# பிலிப்பைன்ஸ் படையினர் முற்றிலுமாக ஈராக்கிலிருந்து நேற்று வெளியேறினர்

(மணிலா)

ஈராக்கில் நிலைகொண்டிருந்த பிலிப்பைன்ஸ் படையினரின் கடைசித்தொகுதியும் நேற்று அங்கிருந்து வெளியேறியது.

இந்தப் படையினர் ஈராக்கிலிருந்து குவைத்துக்கு தரைவழியாகச் சென்று அங்கிருந்து வர்த்தக விமானம் மூலம் பிலிப்பைன்ஸிற்குச் சென்றனர்.

முதலாவது படைத் தொகுதி கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கிலிருந்து வெளியேறியது. பிலிப்பைன்ஸ் படைகளின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் பல்பரான் கடந்த திங்கட்கிழமை மணிலா சென்றடைந்தார்.

உலக நோக்கு

ஈராக்கிலிருந்து பிலிப்பைன்ஸிற்கு மீளவும் திரும்பியது எனக்கு மிகவும் சந்தோஷத்தை அளிக்கிறது. பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நல்லதொரு முடிவை எடுத்துள்ளது எனவும் பிரிகேடியர் ஜெனரல் பல்பரான் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் அரசின் இந்த முடிவு தவறானதென அமெரிக்காவும், அதனோடு இணைந்த ஏனைய நாடுகளும் தெரிவித்தன.

பிலிப்பைன்ஸ் நாட்டின் இந்த முடிவை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், இது பயங்கரவாதிகளின் கோரிக்கைக்கு அடிபணிந்ததாக ஆகிவிட்டதென ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் கொஷியார் சபாரி தெரிவித்தார்.

அத்துடன் பிலிப்பைன்ஸின் இந்த முடிவினால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பாதிப்படைய மாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் -

பிலிப்பைன்ஸூடனான உறவை




அமெரிக்கா மீள்பரிசிலனை செய்துவருகிறது. இது ஒரு புதிய நிலைமை. உலகளாவிய ரீதியில் உள்ள நாடுகளுடனான உறவை நாங்கள் மீளப்பரிசீலனை செய்துவருகிறோம் எனத் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹோவாட்டும் இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

# லைபனானில் கார்க்குண்டுவெடிப்பு ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர் பலி

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் ஹிஸ்புல்லா அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் பெய்ரூட்டின் தென்பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்புப் போராளிகள் வலுவான நிலையிலுள்ள இடத்தில் நடத்தப்பட்டுள்ளது.

தமது அமைப்பைச் சேர்ந்த காலித் அவாலி என்பவரே தனது வீட்டிலிருந்து நேற்றுக்காலை வெளியே செல்கையில் கார்க்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்தது.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி ஜண்ட் அல் - சாம் என்ற சனி முஸ்லிம் ஆயுதக்குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட அவாலி காரின் எஞ்ஜின் பக்கம் வந்தபோதே குண்டு வெடித்ததாக சம்பவத்தை நேரில் கண்ட ஹராத் ஹிரீக் தெரிவித்தார்.

# இந்தோனேஷியாவில் துப்பாக்கிதாரி கிறிஸ்தவ தேவாலயம் மீது தாக்குதல் பெண் மதகுரு பலி; நால்வர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் தேவாலயம் ஒன்றில் ஆயுததாரி ஒருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண துறவியொருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. ஆயுததாரி மத்தியமாகாணமான சுலவெஸ்ஸிப் பகுதியின் பாலு மாவட்டத்திலுள்ள எபற்றா தேவாலயம் மீதே தாக்குதல் நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் பலியானவர் பெண் துறவியான றிவிறெண்ட் அசிஅன்றி தினுலெலி (வயது 29) என்பவராவார். இவர் மதப்போதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே தாக்குதல் நடத்தப்பட்டது காயமடைந்த நால்வரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத்தாக்குதல் தொடர்பான பூரண விசாரணைக்கு தேசிய பொலிஸ் அதிகாரி பாச்ரியர் உத்தரவிட்டார். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேற்றுக்காலை சென்று நிலைமைகளைப் பார்வையிட்டபின்னரே அவர் இந்த உத்தரவை வழங்கினார்.

இந்தத் தாக்குதலானது திட்டமிட்டு இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நோக்கோடு செய்யப்பட்டதென இந்தோனேஷியப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி சுப்பர்னோ தெரிவித்தார்.

இந்த மாகாணத்தில் இந்த வருடம் நடத்தப்பட்ட ஐந்தாவது தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ரஷ்ய பஸ்தரிப்பிடத்தில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் மேற்குப் பகுதியிலுள்ள பஸ் நிலையமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்

இந்தத் தாக்குதல் நேற்று நடைபெற்றது. தலைநகர் மொஸ்கோவிலிருந்து 475 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வொறோனெஸ் என்ற நகரத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

பாதையோரமாகப் பொதியொன்றில் இடந்த குண்டே வெடித்ததென பொலிஸார் தெரிவித்ததாக ரஷ்ய செய்திநிறுவனம், செய்தி வெளியிட்டது.

# 42 ஆண்டுகளாக உயிருடனிருக்கும் பாம்பு

சீனாவில் மருந்து தயாரிப்பதற்காக 42 ஆண்டுகளுக்குமுன் சாடியில் வைக்கப்பட்ட பாம்பு இன்னும் உயிரோடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மத்திய சீனாவில் ஹூபே மாகாணத்தில் பாரம்பரிய சீன மருந்துகளைத் தயாரிக்கும் மருத்துவர் ஒருவர் மருந்து ஊற்றிவைக்கப்பட்ட பெரிய சாடியில் வீரியன் பாம்பு ஒன்றை 42 ஆண்டுகளுக்கு முன் உயிருடன் போட்டுவைத்தார்.

பல மூலிகை மருந்துகள் அந்தச் சாடியில் ஊற்றிவைக்கப்பட்டது. அம மருந்துகள் அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டு புதிய மருந்துகள் ஊற்றிவைக்கப்பட்டன. அண்மையில் அந்தச் சாடியை மருத்துவரின் மனைவி திறந்துபார்த்தபோது பாம்பு லேசாக அசைவது தெரிந்தது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உலகவங்கியின் ஆங்கில நூல் தமிழ் வடிவ வெளியீட்டு விழா!

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது

(கிளிநொச்சி)

உலகவங்கி வெளியிட்ட ஆங்கில அறிக்கையின் தமிழ் வடிவ நூல் அறிமுக விழா நேற்றுக் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த அறிமுக நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கான உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சி வந்தனர்.

இவ்வாறு வந்த உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் - அறிமுக நிகழ்வு நடைபெறுவதற்கு முன்னர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுக்காலை 10 மணி முதல் 11 மணிவரை புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் - தடைப்பட்டுப் போயுள்ள மனிதநேய உதவிகளை எவ்வாறு தொடர்வது என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசு தாமதம் காட்டிவருவதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உலகவங்கிப் பிரதிநிதியிடம் எடுத்து விளக்கினார்.

சர்வதேச சமூகமும் உலகவங்கியும் ரோக்கியோ பிரகடனத்தின்படி இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை உருவாக்குவதே அரசியல் தீர்வுக்கான வழியென உணர்ந்திருப்பதாக உலகவங்கி பிரதிநிதி தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

இதன்பின்னர் - உலகவங்கியின் ஆங்கில அறிக்கையின் தமிழ் வடிவ நூல்களை இலங்கைக்கான உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் அறிமுகம் செய்துவைத்தார்.

இதன்பின்னர் உலகவங்கியின் தென்னாசியப் பொருளியல் நிபுணர் தேவராஜ், யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைப் பேராசிரியர் நித்தியானந்தம், டென்மார்க் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் உரையாற்றினர்.

இந் நிகழ்வில் உலகவங்கியின் பொருளியலாளர் ரோசியா காஸ்ரோ, இலங்கைக்கான யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி நீல்றைற், உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி டென்காம் போல், உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி சர்திறி கப்பன்கல.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கனகசபை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் வி.பி. சிவநாதன், பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் நித்தியானந்தன், கிழக்குப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கலாநிதி முருகதாஸ் மற்றும் விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர் இரோனியஸ் செல்வின் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்த உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் குழுவினர் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினருடன் கலந்துரையாடியபோது....!

# இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சா?

## விரைவில் சர்வஜன வாக்கெடுப்பு!

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதா? என்பது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் - இந்த சர்வஜனவாக்கெடுப்பு விரைவில் நடத்தப்படலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதாயின், அது தொடர்பான பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பி கூறியிருந்தது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம்வகிக்கும் ஜே.வி.பியின் இந்தக் கருத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்தே சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று விரைவில் நடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய நாடுகளில் இடைக்கால நிர்வாகம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை நடைமுறைப் படுத்தும்போது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவது போன்று, இங்கும் சர்வஜனவாக் கெடுப்பை நடத்துமாறு ஜே.வி.பி ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய ஆண் ஒருவரைத் தேடும் பொலிஸார்!

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணுடன் தொடர்புடையவரென நம்பப்படும் ஆண் ஒருவரைக் கண்டு பிடித்து கைதுசெய்யும் முயற்சியில் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு - குண்டுதாரியான பெண்ணை அழைத்து வந்ததாகக் கருதப்படும் ஆணையே பொலிஸார் தேடிவருகின்றனர்.

# யாழ்.வைத்தியசாலையின் இணையத்தளம் ஆரம்பம்!

யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் புதிய இணையத்தளமொன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.ஆறுமுகம், யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் டொக்டர் டி.இ.அம்பலவாணர் ஆகியோர் இந்த இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த இணையத்தளத்தில் வைத்தியசாலை தொடர்பான தகவல்களையும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், வைத்தியர் பிரச்சினைகள், நோயாளிகள் குறித்த விபரங்களைப் பார்வையிட முடியும்.

**jafhos.org** என்ற முகவரியில் இந்த இணையத்தளத்தைப் பார்வையிட முடியும்.

# வேலைக்குச் சென்றவரை காணவில்லையென புகார்!

யாழ். முனியப்பர் வீதியில் உள்ள நடைபாதை புடைவைக் கடையில் வேலைசெய்துவந்த குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையென, மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெற்றோல் நிலைய வீதி - கைதடியைச் சேர்ந்த தேவகுமார் (வயது 27) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான மேற்படி இளம் குடும்பஸ்தர் யாழ். நகரப்பகுதியில் உள்ள நடைபாதை புடைவைக் கடையொன்றில் வேலை செய்துவந்தார்.

கடந்த 14 ஆம் திகதி வழமை போல் வேலைக்குச் சென்றவர், இதுவரையில் வீடு திரும்பவில்லையென இவரது மனைவியான கலைமதி என்பவர் யாழ் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்குத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

### பிரதமர் மஹிந்த...

விக்கப்படுகிறது.

பிரதமருடனான இந்தச்சந்திப்பின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் பாதுகாப்பு ஆலோசகர் கே.என்.டிக்ஸிற் ஆகியோரைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

### இடைக்கால...

பிற்போடுமாறு பரராஜசிங்கம் கேட்டதாகவும் - இதனாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் நடத்த வேண்டுமென ஜாதிகஹெல உறுமயவும் முன்னர் கோரியிருந்தது. அக் கட்சியின் தலைவரான வண. அத்துரலிய ரத்ன தேரரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இந்த விவாதத்தை எந்தவொரு தினத்திலும் நடத்துவதற்கு அரசாங்கம் ஆயத்தமாக இருப்பதாக அரசாங்கத் தரப்பிலிருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர். இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் தேர்தல் சட்டம் திருத்தம் குறித்த அரசின் யோசனைகளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதென கட்சித் தலைவர்கள் தீர்மானித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் புதிய பொருளாதார கொள்கை தொடர்பான விவாதம் நாளை நடைபெறவுள்ளது. (தே)

### புலிகளின்...

பதிலளித்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளை கரிசனையுடன் அவதானித்து வருவதாகவும், இலங்கையில் இன்னும் அதிகமாக முதலீடு செய்ய தமது நாடு விரும்புவதாகவும் கூறினார்.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால, ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர், வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் பண்டார ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

### கண்காணிப்புக்குழு...

கொண்டனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மூதூரில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், தற்போதைய சமாதான சூழ்நிலைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (10)

### மக்களையும் தேசத்தையும் காப்பாற்ற...

படுத்தி, புறந்தள்ளி சமாதானச் சூழலை சீர்குலைத்து, எமது மக்கள் மீதும், எமது தேசத்தின் மீதும் போரைத் திணிக்கின்ற வேளையில் - அதனை எதிர்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு எப்போதும் தயாராகத்தான் இருக்கிறது.

இன்றைக்கு அரச தரப்பிலிருந்து வருகின்ற செய்திகளெல்லாம் போருக்கான ஆயத்தங்களும், யுத்தத்தை நோக்கித் தள்ளுகின்ற மாதிரியே இராணுவத் தளபதியிலிருந்து எல்லோருடைய கருத்துக்களும் இருக்கின்றன.

அண்மைய நாட்களில் கருத்துக் கணிப்பில் தேர்தலொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் தென்னிலங்கையில் மேலோங்கி இருக்கிறது. இவையெல்லாம் இந்தச் சூழ்நிலையைக் குழப்புகின்ற நோக்கம்தான்.

உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட - உரிமைக்காகப் போராடுகின்ற இனம் தான் தங்கள் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான தீர்மானத்தை எடுக்கும். அதுதான் வழமை

சிங்களப் பெரும்பான்மையினத்தால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு என்ன கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கணிப்பு சிங்களப் பெரும்பான்மை இனத்திடமிருந்து நடத்தப்படுவது ஒரு பொருத்தமில்லாத விடயம். மற்றையது - காலங்காலமாக தேர்தலில் இதைத்தான் கூறியிருக்கின்றார்கள்.

சிங்களப் பெரும்பான்மை இனம் எப்பொழுதுமே தமிழ் மக்களை அடிமைப்படுத்துகின்ற சிந்தனைப் போக்குகளினாலும் செயற்பாடுகளினாலும்தான் இந்தப் போராட்டம் தீவிரமடைந்தது.

எங்களுடைய மக்களின் உரிமைகள், அவர்களது எதிர்காலம் என்ற வகையில் தேசியத்தலைவர் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றார்.

சமாதான வழியில் அந்தத்தீர்வை எட்டுவதற்கு இந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம். அதைச் சீர்குலைத்து யுத்தத்துக்குத் தள்ளுவது வேதனைக்குரியவிடயம்.

ஆனாலும், அதனை எதிர்கொண்டு எமது மக்களை - எமது தேசத்தை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எங்களிடம் இருக்கிறது. அதற்கேற்ற வகையில் எங்களுடைய விடுதலை அமைப்பை சரியான நேரத்தில், சரியான சூழ்நிலையில் எங்களுடைய தலைவர் வழிகாட்டுவார்.

தென்னிலங்கையில் ஏற்படும் சூழலை வைத்துக்கொண்டு நாங்கள் எப்பொழுதும் எதையும் உறுதியாகக் கூறமுடியாது. நிலைமைகளை எமது தலைமைப்பீடம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு எங்கள் நிலைப்பாடுகளைத் தெளிவாக விளக்கி வருகிறோம்.

எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இடைக்காலத் தீர்வை முன் வைத்திருக்கிறோம்.

அதனையும் அரசாங்கம் உதாசீனப்படுத்தி எமது மக்களுக்கு எதுவித நன்மையும் இல்லாமல், நெருக்கடியைத் திணித்துக்கொண்டு இந்த நிலைமையை இழுத்தடிப்புச் செய்வது பாரதூரமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

ஆகவே - அதுபற்றி எமது தலைவர் சரியான நேரத்தில், சரியான சூழ்நிலையில் தீர்மானங்களை எடுப்பாரென நினைக்கின்றேன்.

உலகவங்கியால் ஏற்கனவே பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் தொடர்ந்தும் அதனை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எங்களோடு இணைந்து முன்னெக்கப்படுகின்ற - மக்களுக்கான அவசர, மனிதாபிமானப் பணிகளுக்கு எங்களது ஒத்துழைப்பை நிச்சயமாக வழங்குவோம். அது எவ்வளவு தூரம் எமது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு - தேவைகளுக்கு ஏற்றளவில் முன்னெடுக்கப்படும் என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - இராணுவம், பொலிஸ் - அவர்களுடைய கட்டமைப்புக்கள் அதிகாரத்தைச் செலுத்துகின்றது. ஆகவே, அவர்களின் ஆளுகைக்குள் அது இருக்கிறது. ஆகவே, அங்கு நடக்கின்ற கலாசார சீரழிவுகளைக் கட்டுப்படுத்துகின்ற சட்டரீதியான வலு அவர்களிடம்தான் இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டம், ஒழுங்கு உறுதியாகப் பேணப்படுகின்றது. மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், நிறைவாக இருக்கிறார்கள்.

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து சீர்கேடுகள் மோசமடைந்திருக்கிறது. அங்குள்ள படைத்தரப்பும் அவர்களது நிர்வாகச் சீர்கேடுகளும்தான் இதற்குக் காரணமாகும்.

அரசியற்பணிகளுக்குச் சென்றுள்ள போராளிகள் மட்டும்தான் அங்கு செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, புது அமைப்புக்களை உருவாக்கி, ஒரு சீர்திருத்த நடவடிக்கையினை விழிப்புணர்வுக்கு ஊடாக எடுத்துச் செல்வதற்கு நாங்கள் சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோமே தவிர, இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஊடாகவே இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம். அங்கு நிர்வாகம் எங்களிடம் இல்லாததால், அதனை முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் இருக்கின்றது. ஆனால், முடிந்தளவு முனைகின்றோம். எனத் தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

**தொலைபேசி இயக்குநர் தேவை**

யாழ்.நகரில் இயங்கிவரும் தொலைபேசி நிலையத்திற்கு தொலைபேசி இயக்குநர் அல்லது பயிலுநர் தேவை. இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு
222 7638, 077 6577488

கலைவட்டம் நுண்கலைத்துறை
பிரெஞ்சு நட்புறவுக் கழகம்- யாழ்ப்பாணம்

முதுசம் X

13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி

An Exhibition of Painting by 13 Artists from Jaffna

20 யூலை - 18 ஓகஸ்ட் 2004 வரை
காலை 10.00 மணி - மாலை 5.00 மணி
பிரெஞ்சு நட்புறவுக்கழகம், 83, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்

மதனா ஜுவல்லறி 177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.